நாம தமிழா.

# தென்மொழி

## வந்து பொருந்துக!

உண்மையர் நேர்மையர் ஊக்க உழைப்பினர்
திண்மையர் ஒழுங்கினர் திந்தமிழ் நெஞ்சினர்
அண்மையர் சேய்மையர் ஆக்கம் கருதுவர்
ஒண்மையர் யாவரும் உடன்வந் திணைகவே!

தொண்டு கருதிடும் தூய உளத்தினர்
மண்டு காதலால் மணித்தமிழ் பேணுநர்
விண்டு விளக்கிடும் விறுகொள் அறிவினர்
கண்டு தொடங்கிடும் கழகத் திணைகவே!

பொதுமை பேணிடும் பூந்தமிழ் நெஞ்சினர்
புதுமை வேண்டிடும் பொய்யறு காட்சியர்
முதுமை இளமையர் முரிபடாக் கொள்கையர்
இதுமெய் அணியென எண்ணி இணைகவே!

வாழ்வழி வையத்து வாழும் நினைவினர்
சூழ்வழி சூழ்ந்துளம் சுழிபடா நோக்கினர்
பாழ்வழி பலகண்டு பதைக்கும் உயிரினர்
வீழ்வழி ஈதென விரைந்துவந் திணைகவே!

துளியொடுந் துளியெனத் தோளொடுந் தோளென
ஒளியொடும் ஒளியென உயிர்ப்பொடும் உயிர்ப்பென
வளியொடும் வளியென வார்ந்த வலிவென
தெளிவொடுந் துணிவொடும் தேர்ந்துவந் திணைகவே!

நந்தமிழ் காக்கவும் நம்மினம் மீட்கவும்
செந்தமிழ் நாட்டினைச் சீருறப் பேணவும்
முந்து தமிழின முன்னேற்றக் கழகத்து
வந்து பொருந்துக! வாய்மையின் உழைக்கவே!

சுவடி : 18
ஓலை : 8

ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

விலை
உருபா : 1-25

www.thamizham.net - Free E book No 7515

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 876 :** ஐயா, வணக்கம். பண்ணாய்வறிஞர் குடந்தை ப. சுந்தரேசனார் காலமான செய்தியைத் தென்மொழி வாயிலாக அறிந்து அதிர்ச்சியுற்றேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழிசை விரிவுரையாளராய் இலங்கிய அவர், மேலதிகாரிகளின் போக்குப் பிடிக்காமல் அப் பொறுப்பை உதறியெறிந்து விட்டுத் தம்மந் தமியராய்த் தமிழிசை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு கொஞ்சநஞ்சமன்று. தமிழ்நாட்டில் அவர் கால் படாத சிற்றூரே இல்லை எனலாம். அவர் தம் தமிழிசைத் திறனை வியக்காதார் எண்ணிக்கையில் மிகக் கொஞ்சமாகவே இருக்க முடியும்.

.. அடுத்த ஆண்டுக் கோடையில் பள்ளி விடுமுறையின் போது விடுப்பில் தமிழகம் வரும்போது, பண்ணாய்வறிஞரைச் சந்தித்து, நான் எழுத விருக்கும் நூலொன்றுக்கென யாழ்நூல் யாத்த விபுலானந்த அடிகளாரைப் பற்றிய சில செய்திகளைக் கேட்டு உறுதிப் படுத்திக் கொள்ள எண்ணியிருந்தேன். அதற்குள் ... காலன் என்னை முந்திக் கொண்டான். கூற்றுவன் மிகப் பொல்லாதவன்! கொடியவன்!

— **அரங்க முருகையன், இங்கிலாந்து.**

**0 : 877 :** தமிழினம் காக்க வந்த பாவலரேறு ஐயா, வணக்கம். 'தென்மொழி'யில் ஆசிரியவுரைக்கு முன்னால் கட்டமிட்டு வரும் செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. பட்டம் பெற்ற பேராசிரியர்கள் கூட, தமிழ் உணர்ச்சி கொஞ்சமும் இல்லாமல் தமிழைக் கெடுத்து வருகின்றனர். இங்குள்ள தமிழர்களே நம் கொள்கையை உணராமல் மறுக்கும் போது, நம்மவரே நம்மை எதிர்க்கும் போது, எதிரியை நாம் எப்பொழுது சரிக்கட்ட முடியும்? நிலைமை எப்படி இருப்பினும் நம் தொண்டு தொடரும். ஒவ்வொரு தமிழனும் சிந்திக்கத் தொடங்கி விட்டால், வெற்றி நமதே. இதுவரை அறைக்குள்ளேயே இருந்து விட்டோம். இனி உ. த. மு. கழகமாக மக்களிடையே வருகிறோம். — நம் பணி, மொழி, இனம் — ஆகிய இரண்டு வழியிலும் சென்று பரவவேண்டும். இளைஞர்களாவது நம் பணியை உணர்வர் என்று நம்புகிறோம்.

— **தென்னவன், மேலைச்சிவபுரி.**

**0 : 878 :** இன்றைய தமிழகத்தில் புற்றீசல்களுக்குப் போட்டியாய்க் கிளம்பிய, போக்கிலா மழலையர் பள்ளிகள்! மேனாட்டுத் தாக்குறவால் மூலை முடுக்கெல்லாம் ஆங்கிலப் பள்ளிகள்! LKG - UKG என்று ஆங்கில வேட்கை கொண்டு அலையும் பச்சைத் தமிழ்ப் பெற்றோர்கள். மூன்றகவை நிறைந்தவுடன், முத்தமிழின் அரிச்சுவடி முன்னெழுத்தை அறியும் முன்னம், ஏபிசிடி-யைப் படிக்க வேண்டிய இக்கட்டான நிலை. தமிழகத்தில் பிறந்த தமிழ்க் குழந்தை தமிழ் படிக்கத் தடையா? அறிவை அடகு வைத்துவிட்டு, அன்னை மொழிப் பற்றில்லாமல் பள்ளிகள் நடத்துவதை வணிகத் தொழிலாய்க் கொண்டவர்களைப் பற்றி என் சொல்வது? என் செய்வது?

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7515

# உலகப் பேரியக்கம் இங்கே உருவாதல் காண்பீர்!

உயர்ந்தபணி! தொடங்கிடுவோம்! உயிர்முயற்சி செய்வோம்!
ஒப்பற்ற தமிழினத்தை ஓரணிசெய் துய்வோம்!
அயர்ந்தஇனம், தளர்ந்தமனம், அடிமைநிலை நீக்கி,
ஆக்கவழி நடப்பதெனில் அருஞ்செயலும் அன்றே!
பெயர்ந்தநிலம் யாதெனினும் பெறுநிலையென் னெனினும்
பெருந்தமிழால் ஒன்றிணைவோம்! பெருமைபெற வாழ்வோம்!
மயர்ந்தமனம், தயங்குநிலை, மாசுதவழ் எண்ணம்
மாய்ந்தொழிந்து போகட்டும்! மறுமலர்ச்சி திண்ணம்!

பேரன்பு கொண்டவரே! பெரியோரே! எம்மைப்
பெற்றதமிழ்த் தாய்மாரே! பெருதஉடன பிறப்பீர்!
ஈரந்தோய் நெஞ்சினராய் இறைஞ்சுகின்றோம், உம்மை!
இன்றிணைதல் இல்லையெனில் என்றுமினி இல்லை.
சாரம்போய் மணமும்போய்ச் சக்கையராய் நிற்போம்!
'சகுனி'குணம் போகவில்லை; சழக்ககல வில்லை!
காரம்போய்ப் பயனென்ன? கடைநிலைக் கத் தாழ்ந்தோம்!
காத்திடுவீர் இனநலத்தைக் காலத்தால் இன்றே!

நாளுக்கொரு கட்சியினில் நாம்நழுவி வாழ்ந்தோம்!
நலன்துளியும் விளையவில்லை; நடுக்கடலில் வீழ்ந்தோம்!
ஆளுக்கொரு பாத்திகட்டி அதில்விளைவு செய்தோம்!
அரைவிளைவு கால்விளைவே! அளந்ததெலாம் சோர்வே!
சூளுக்கொரு குறைவில்லை; சுழற்றுகிறோம் பேச்சை!
சொன்னதென்ன? சொல்வதென்ன? யாரளந்து சொல்வார்?
தோளுக்கொரு துணைதேடித் துணைதேடிச் சோர்ந்தோம்!
தொட்டபணி விட்டபணி! தோல்விகளே எச்சம்!


சேரன்பேர் சோழன்பேர் பாண்டியன்பேர் சிலம்பிச்
செருக்குரையும் நெருப்புரையும் செய்தனதான் என்ன?
நேரம்போய் எண்ணுவதில் நீள்பயனும் உண்டோ?
நெடுங்காலம் கடத்திவிட்டோம்! நிலைத்தவிளை வென்ன?
வீரம்பொய், அன்பும்பொய், விருந்தும்பொய், நம்மின்
வென்றவர லாறும்பொய், விளைவும்பொய்—என்றால்
ஓரம்போய் நில்லுங்கள்! ஒதுங்குங்கள்! நாளை
உலகப்பே ரியக்கமிங்கே உருவாதல் காண்பீர்!

www.thamizham.net - Free E book No 7515



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ திருவனம் தி. பி. 1990 (1959) ]



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்**

புரப்பாசிரியர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை), தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக் குமரனார். தென்மொழி ப. துரையரசன்.

அமைச்சர் : அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி : [8] தி.பி.உ0கஉ துலாம் (அக்-நவம்பர்'81) [ஓலை : 8


# ஒரே உணர்வுடன் ஒன்று சேர்வோம்!



ஒன்றுயிருந்த பேரினம், உயர்ந்த பல இயற்கைக் கூறுகளும் மெய்யறிவுக் கருத்துகளும், பொலிந்து தோன்றிய உயர்தனிச் செம்மொழியாந் தீந்தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஒபபற்ற ஓரினம், உலகுக்கே மன நலப் பண்பாட்டையும் மாந்த நல நாகரிகத்தையும் ஒருங்கே கற்பித்த சீரினம், ஒளிதமிழ்த் தாயினம், இன்று, உயிர் நலம் குன்றி, உணர்வு வளம் செத்து, இடுப்பொடிந்த ஏர் மாடு போல, வடுப் பரிந்து, வழி


www.thamizham.net - Free E book No 7515

நடை தளர்ந்து, கெடுப்பார் கெடுப்பதினும், தானே கெட்டுத் தடுமாறி நாளுக்கு நாள் சீர்குன்றித் தேய்ந்து தேய்ந்து, தேரையாய்ப் போய்,மாய்ந்து கொண்டுள்ளது. இதுவும் ஓய்ந்துபோய்,எப்பொழுது உயிர் மூச்சை விடுமோ. அப்பொழுது நம் பயிர் வீச்சைச் செய்து கொள்ளலாம் என்று பக்க நின்று காலம் பார்த்திருப்பார், பலர்!

நீண்ட நெடுங்காலம் அடிமைத் தூக்கம்! மாண்ட பெருமைகளை வைத்தே வயிறு வளர்ப்பவர்களின் தன்னினக் கெடுமைத் தாக்கம்! உலகெங்கும் ஓடோடி ஓடோடிச் சளைத்த கால்கள்! இனியும் மேலேறுவோமா என்று சலித்த நெஞ்சங்கள்! அறிவிருந்து என்ன பயன்? அறிவியல் வளர்ந்துதான் ஏது பயன்? — என்று ஏங்கிக் கிடக்கும் ஒரு சில தூங்கா உள்ளங்கள்! இவற்றுக் கிடையில், கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இடைவிடா முயற்சிகள்! இருப்பினும் இன்று வரை இற்றிற்று வீழும் விளைவுகள்! ஒரு கை ஏறினால் ஒரு முழம் சறுக்குகிறது! என் செய்வது? பிழை எங்கே இநக்கிறது?

சாதியிலா? மதத்திலா? சாத்திரச் சழக்குகளிலா? கட்சி வழக்குகளிலா? கண்மூடிப் பின்பற்றுதலிலா? வரலாற்று மறைப்பிலா? அடிமை மனத்திலா? அங்காந்த தன்னலத்திலா? பொறாமையிலா? புழுக்கத்திலா? புறத்தே நகைத்து அகத்தே பகைக்கும் வஞ்சகத்திலா? அனைத்தையும் தானே கட்டியாள நினைக்கும் அதிகாரக் கொட்டாவியிலா? அல்லது தன்னைத் தானே மாய்த்துக் கொல்லும் தற்கொலை முயற்சியிலா? அல்லது இவற்றுள் ஒன்றிலா? சிலவற்றிலா? அல்லது அனைத்திலுமா?

அஃது எங்கே இருந்தாலும் நம் ஆராய்ச்சி இக்கால் தேவையில்லை; அதற்கு முடிவே இராது; விடிவே வராது! எஃது எப்படியாயினும், நம்மை நாமே பொருதிக் கொள்ளும் போக்கு உடனே ஒழிந்து போக வேண்டும்; நம்முள் ஓரணியை இன்னோரணி அழிக்கும் இழிவுத் தனம் உடனே நின்றாக வேண்டும்; ஒரு கட்சியை இன்னொரு கட்சி காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம் வேரறுந்தாக வேண்டும்! நாம் ஒருவர் - தமிழர் - தமிழினத்தவர் — என்ற பசுமை மனம் நம்மைப் பற்றியாக வேண்டும். நமக்குள் ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ள முற்படும் இரண்டகத் தனத்திற்கு நாம் இனியேனும் முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும்.

தமிழ் என்னும் உயிரால்,தமிழினம் என்னும் பெயரால் — நாம் ஒன்று திரண்டாக வேண்டும். நல்ல நோக்கம் உடையவர்களை ஓரணியில் திரட்டியாக வேண்டும். உயர்ந்த கொள்கைகளுடன், உலகத் தமிழின முன்னேற்றத்திற்கு நாம் பாடுபட வேண்டும். அதற்கு, நம்மை வேறுவேறாகக் கூறு பிரிக்கும் கட்சிகள் முதலில் ஒழிய வேண்டும்; நம்முள் பல பூசல்களையும் அறியாமைகளையும் மூட நம்பிக்கைகளையும் வளர்க்கும் மதங்கள் ஒழிந்தாக வேண்டும்;

www.thamizham.net - Free E book No 7515

நம்மைக் கோடானகோடிக் குறுங்குழுக்களாகப் பிரித்து, ஒன்றுக் கொன்றை ஏற்றத் தாழ்வுடையதாகச் செய்யும் சாதிகளைத் தூள் தூளாக உடைத்துத் தகர்க்க வேண்டும் நம் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் அல்லது பிறங்கடைகள், சாதிகளற்ற, மதங்களற்ற சம நிலைக் குமுகாயத்தில் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும். பொரு ளியல் ஏற்றத்தாழ்வற்ற பொதுவுடைமைக் குமுகாயத்தில் பூத்துக் குலுங்க வேண்டும். அதிகாரச் செருக்கும் பதவி மதநீரும், ஆளுமைக் கீழ்மைகளும் ஒழுகாத தூய குடியரசாட்சியில் தோன்றித் துலங்குதல் வேண்டும். மானத்தை விற்று, மாந்தத்தைக் கட்டழிக்கும், காமத்தை, இழிவைக் கலைகளெனும் பெயர் வைத்து, தீய வயிறு களின், திருந்தாத புன்மை மனங்களின், தினவை அடக்கிக் கொள்ளும், விலங்குத் தனங்களுக்கு வேட்டு வைத்தாக வேண்டும். வாழ்க்கையில், வாழ்க்கையின் முடிவில். நாம் வாழ்ந்திருந்த — உயிர்ந்திருத்த — காலத்தின் அருமைக்கும் பெருமைக்கும் ஈடு கருதும் படி — ஒரு பொருளிருக்க வேண்டும். அதுவன்றி, வந்தோம் வாழ்ந்தோம் என்று ஈறும்பும் ஈயும், பருந்தும் பல்லியும் வாழ்ந்து வாழ்ந்து, மடிந்து மடிந்து உயிர்ச் சுழற்சி செய்வது போல் நாமும் இருக்கக் கூடாது. எதற்காக வாழ்ந்தார் என்று இருப் பவர் எண்ணி, எள்ளி நகைக்கும்படி, நம் பிணம் சுடுகாடு போகக் கூடாது. உண்ணுவதும், உடுப்பதும், உலவுவதுமாய், வாழ்க்கை பண்ணுவதும் சாவதும் பழியோ பழியென்று எண்ணவேண்டும்.

எனவே, நமக்காக மட்டுமே நாம் வாழக் கூடாது. நாம் தோன்றிய மண்ணுக்காகவும், நம்மைச் சுற்றியுள்ள மாந்தர்க்காகவும், அவர்களுடனும், அவர்களின் அன்புடனும். அறிவுடனும் தொடர்பு படுத்திய மொழிக்காகவும் நாம் வாழ வேண்டும். மக்கள் கூட்டமே ஒன்று என்னும் மன்பதைக் கோட்பாட்டு எல்லையை நாம் தொடு தற்கு முன், நாம் இனம் கண்டு கொண்டுள்ள — நம்மை இனங் கண்டு கொண்டுள்ள — நம் இனத்திற்கும், நம் மொழிக்கும் மட்டுமேனும் நாம் வாழ்ந்து செத்தாக வேண்டும்.

இன்றுள்ள நிலையில் உலகம் ஏற்றத்தை நோக்கிப் போக வில்லை. ஒரு வெறுமைப் பாழ்வெளியில் கால்வைக்கவே அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கிடக்கிறது. தாழ்ந்த நிலையை நோக்கியே தலைதெறிக்க ஓடுகிறது. இந் நிலையில், இஃது எங்கு ஒடித் தலைகுப் புற விழுமோ தெரியவில்லை. அந்த முறையில் நம் தமிழினமும், வலிந்த கால்கள் உடையவர்களுடன், சவலைக்கால் உள்ள ஒருவனும் வலிந்து வலிந்து ஓடுவதுபோல் ஓடிக்கொண்டுள்ளது. இந் நிலையில் நமக்குப் பல வகை வலிந்த முயற்சிகள் தேவை. இதனை நாம் செய்ய முடியுமா என்பது ஒருபுறம் இருக்கட்டும். நாம் இதையாகிலும் செய்யாமல் வேறெதைச் செய்வது? எந்த இலக்கை நோக்கி வாழ் வைச் செலுத்துவது? நாம் பிறந்த நிலைக்கு, நமக்குரிய, நம்மால் முடிந்த கடமையைச் செய்யத்தான் வேண்டும். செய்யாமல் நாம்

www.thamizham.net - Free E book No 7515

வாழ முடியாது ; வாழவும் கூடாது. எனவே இதை நாம் செய்தே ஆக வேண்டும். 'இதைச் செய்துதான் தீரவேண்டுமா ? நம் மட்டில் நாம் இருந்தாலென்ன ?' — என்றும் சிலர் எண்ணலாம்.

'அவரவர், அவரவர் வாழ்க்கையை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தாலே போதும் ; அனைத்து நிலைகளும் சரியாக நடந்து விடும் — என்று அமைந்திருக்கின்ற வெறுமை நிலை, சரியான உயிர் மதிப்பீட்டுக் கொள்கையன்று. உயிர், வளர்ச்சி பெறவேண்டும். அது தனித்தும் வளர வேண்டும்; தழுவியும் வளர வேண்டும், ஆழமாகவும் வளரவேண்டும் ; அகலமாகவும் வளர வேண்டும். எனவே, நம் இயக்கம் நமக்காக மட்டும் இருத்தல் கூடாது. நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்காகவும் இருத்தல் வேண்டும். ஆனால், நம்மைச் சுற்றி வரைந்து கொள்ளும் வட்டம், மிகச் சிறியதாகவும் இருத்தல் கூடாது. மிகப் பெரியதாகவும் இருத்தல் கூடாது. மிகச் சிறியதாக இருந்தால், வாழ்க்கை தன்னலம் உடையதாகவும், வெறுமையுடைதாகவும், பயனற்றதாகவும் இருக்கும். மிகப் பெரியதாக இருந்தால் அது, பரபரப்புடையதாகவும், அமைதியற்றதாகவும், உயிரழுத்தம் உடையதாகவும் இருக்கும். எனவேதான் உற்றம், சுற்றம் என்ற வட்டம், ஊர், நாடு என்ற வட்டமாகவும், மொழி, இனம் என்று ஓரளவு விரிந்த எல்லையுடையதாகவும், அமைதல் வேண்டும். அஃது உலகப் பொதுமை என்ற அளவில் அமைந்து, மொழி, இனம் என்னும் எல்லைக் கோடு தாண்டி, மிக விரிந்த வட்டமாக ஆக்கிக் கொள்வது, நம் உயிராற்றல் எல்லைக்கும் வினையாற்றல் எல்லைக்கும் மிகையானது. எனவே, தமிழர் ஒவ்வொருவரும், தாழ்ந்து கிடக்கும் தன் மொழி நலத்துக்கும் இன மீட்புக்கும் உழைப்பதே, தம் தலையாய கடன் என்றும், தம் உயிரியக்கத்திற்கும் பொருந்துவதான கடமையென்றும் உணர்தல் வேண்டும். அதுவன்றி, உலக மக்களெல்லார்க்கும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்பதே சிறந்த பொதுமை உணர்வு என்பதும், தமிழ், தமிழினம் என்பன குறுகிய எல்லைகளே என்பதும், பொருத்த முடைய கூற்றுகள் அல்ல. அவரவர் மொழிக்கும் அவரவர் இனத்திற்கும் அவரவர் நாட்டிற்கும் பாடுபடுவதற்கான ஆற்றலும் அறிவுமே மக்களிடம் இயற்கையாக அமைந்து உள்ளன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இனி, ஒருவர் அரசியல் கட்சியில் சேர்ந்து உழைப்பது, ஆசைகளையும் பாசங்களையும் வளர்த்துக் கொள்ளவும், நமக்கிருக்கும் உள்ளவுணர்வையும் உயிர்ப்பாற்றலையும் வீணடித்துக் கொள்ளவுமே வழிவகுக்கும். அரசியலீடுபாடே தவிர்க்க வேண்டும் என்பதன்று நம் கொள்கை. இக்கால் உள்ள அரசியல் நிலைகளைத் தூய்மைப் படுத்தினாலொழிய நல்லவர்களும் அறிவுள்ளவர்களும் அதில் ஈடுபட முடியாது. சூழ்ச்சிக் காரர்களும், பொய்யர்களும்,ஏமாற்றுக்காரர்களும்,வஞ்சகர்களுமே நிரம்பிய குட்டையாக, இக்கால் அஃது இருக்கிறது. அஃது,

www.thamizham.net - Free E book No 7515

பெருமளவில் தூய்மைப் படுத்தப்படும் பொழுதுதான், நல்லவர்களும் நேர்மையானவர்களும், உண்மையானவர்களும், ஒழுக்கமுள்ளவர்களும் ஓரளவு அதில் ஈடுபட முடியும். நம் நாடு குடியரசு நாடாக ஆன பின், அனைத்துத் துறைகளிலும் பல வகையில் கவனம் செலுத்தத் துடிக்கின்ற நாம், அரசியல் குட்டையை மட்டும் தூய்மைப் படுத்த எவ்வகை முயற்சியும் செய்யாமல் மேலும் மேலும் நாற விட்டுக் கொண்டேயிருக்கின்றோம் முடியரசாட்சியின் அதிகார வெறி, நாம் குடியரசாட்சியின் கீழ் வந்த பின்னரும்கூட நமக்குத் தெளிய வில்லை. இனி. நாம் தொடங்க விருக்கும் உ. த. மு க. வும் ஒரு காலத்தில், மிக இன்றியமையாத நிலையில் தன்னை ஓரளவு அரசியலி லும் ஈடுபடுத்திக் கொள்ளவே செய்யும் என்பது, உவப்பற்ற மக்கள் கூட்டத்திற்குள்தான் நாமும் உலவியாக வேண்டும் என்றும் உண்மையை அடிப்படையாகக் கொண்டது. எனவே, அதைப் பற்றியெல்லாம் இப்பொழுது நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

இக்கால், இறுதியாக நாம் சொல்ல வந்தவை, எவ்வாறேனும் நம் மொழியைப் பற்றியும் இனத்தைப் பற்றியும் நாம் ஒவ்வொருவரும் கவலை கொள்ள வேண்டும் என்பதும், அந்த நிலையில்தான் அவை யும் உள்ளன. என்பதுமே, அப்படிக் கவலைப்பட்டு, அனைவருமே முயல வேண்டும் என்பதில்லை. ஒரு வினையில் எல்லோருமே, எப் பொழுதுமே முழுமையாக ஈடுபட வேண்டிய தேவையில்லை. முனைப் புடைய ஒரு சிலரோ பலரோதாம் இயக்க நிலையில் முன் வரிசையில் நிற்பர். அவர்கள்தாம் இயக்க முயற்சியில் ஏற்படும் பல வகை யான துன்பங்களையும் சுமைகளையும் தாங்கிக் கொள்வார்கள். மற்ற படி, எல்லாருமே அவற்றைத் தாங்கிக் கொள்ள வேண்டுவதில்லை. போர்ப் படையில் சேருபவர்கள் அனைவருமே போருக்குச் செல்வ தில்லை. இனிப் போருக்குப் போகும் அனைவருமே போர் முனைக்குச் செல்ல வேண்டியிராது. பொதுத் தொண்டும் அப்படிப்பட்டதுதான். முனைப்புடைய ஒரு சிலர்தாம், முன்னணியான அனைத்து வினைகளி லும் ஈடுபட்டுத் தமக்கு அவற்றால் வரும் தொல்லைகளையும் துயரங் களையும் தாங்கிக் கொள்வர். இதைத் திருவள்ளுவர் 'குடிசெயல் வகை' என்னும் அதிகாரத்தின் ஏழாவது குறட்பாவில் தெளிவாகக் கூறுவர்.

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. (1027)

என்பது அது. எனவே ஒரு பொது இயக்கத்துள் சேர்பவர் — பங்கு கொள்பவர் — கட்டாயமாக அதன் அனைத்து வினைகளிலும் ஈடு பட்டுத்தான் ஆக வேண்டும் என்பதில்லை. முனைப்பாக உள்ளவர் சிலரும், இயல்கின்ற சிலருந்தாம் அவ்வாறு ஈடுபடுவர். மீதி உள்ள வர் அந்த இயக்கத்திற்கு உடப்பாக இருந்து இயக்கத்தின் உயிராகிய

www.thamizham.net - Free E book No 7515

கொள்கைகளைக் கடடிக் காப்பர்; அவற்றிற்குத் துணை நிற்பர். ஆனால் ஒன்றை நாம் கவனித்தல் வேண்டும். ஒரு கொள்கைக்கு ஆதரவாக இருப்பவர்கள் பெருகப் பெருகத்தான், அக்கொள்கை மற்றவர்கள் கவனத்துக்கு வரும்; அதன் வழி வலிந்த செயற் பாட்டுக்கும் வரும். மற்றபடி ஒரு கொள்கை எத்தனை வலிவுடைய தாக, அறிவுக்குப் பொருத்த முடையதாக, உண்மையுடைதாக, செயலுக்குரியதாக, மிகவும் இன்றியமையாமை உடையதாக இருந் தாலும், அது வெறும் ஏட்டளவில், எழுத்தளவில், அல்லது கருத் தளவில் இருக்க வேண்டியதுதான். எனவே, ஒரு கொள்கை எப்படி யிருக்கிறது என்பதைப் பார்க்கிலும், அதற்கு எத்தனைப் பேர் ஆதர வாக இருக்கின்றனர் என்பதே முகாமையானது. அவர்களின் தொகைப் பெருக்கத்தை வைத்துத்தான் அது மக்களைக் கவரும்; அரசைக் கவரும். நம் நாட்டு இயக்கங்களுக்கு வலிவான கொள்கை-கள் உள்ளனவாக நாம் கருத முடியாது கொள்கைகள் என்பன ஏதோ பெயரளவில்தாம் அவற்றுக்கு இருக்கின்றன. அவர்களின் செயல் களுக்கும் அவர்களே வகுத்துக் கொண்ட கொள்கைகளுக்கும் உள்ள தொடர்பும் குறைவே. அதனால்தான் நாட்டில் இத்தனை நலிவுகளும் மெலிவுகளும் ஏற்பட்டு, ஒரு நல்ல விளைவு ஏற்படாமல் இருக்கிறது.


எனவே, நாம் தொடங்க விருக்கும் உலகத் தமிழின முன்னேற் றக் கழகத்திற்கு நல்ல கொள்கைகள் இருந்தாலும், அவற்றிற்கு நல்ல வரவேற்புகள், வாழ்த்துகள் இருந்தாலும், மக்களின் ஆதரவு பெருக வேண்டும். ஆதரவு பெருகத் பெருகத்தான் இக் கழகம் வலுப்பெறும். அப்பொழுதே அதன் கொள்கைகளை நாம் செயலுக்குக் கொண்டு வர முடியும். இக் கொள்கைகளுக்கு அன்பர்கள் ஆதரவு உள்ளது என்பதை, இத் தொடக்க மாநாடு மெய்ப்பித்தாக வேண்டும். அதற்கு அன்பர்கள் பேரளவில் மாநாட்டில் பங்கு கொள்ள வேண்டும். இயக்கத்தில் உறுப்பினர்களாக வேண்டும். உலகத் தமிழின முன் னேற்றக் கழகம் நாம் அனைவரும் பங்கு கொள்ளுவதற்குரிய ஒரு குமுகாய இயக்கமே! பணியில் இருப்பவர், இல்லாதவர், ஆசிரியர், மாணவர், மகளிர், செல்வர், நடுத்தரமானவர், ஏழையர் என்றவேறு பாடின்றி, அனைவரும் இதில் பங்கு கொள்ள வேண்டும். உறுப்பினர் ஆதல் வேண்டும். ஆங்காங்கு ஏராளமான கிளைகள் அமைதல், அல்லது தொடங்கப் பெறுதல் வேண்டும். இதன் நடவடிக்கைகள் பொதுவானவை; உயர்ந்தவை; நம் எல்லார்க்கும் உரியவை. இது பதிவு செய்யப் பெறும். இதன் பணிகள் இன்றைய நிலையில் மிக மிகத் தேவையானவை; இன்றியமையாதவை. இனி, போகப் போகத்தான் இதன் தேவையும், இன்றியமையாமை பற்றியும் விளங்கும்.

எனவே, எவரும் இதில் பங்கு கொள்ளாமல் ஒதுங்கி யிருக்க வேண்டாம். இதில் ஒவ்வொருவரும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள

www.thamizham.net - Free E book No 7515

வேண்டும். பெரும்பாலும், அரசுப் பணியில் இருப்பவர்கள் இவ்வியக்கம் தாங்கள் ஈடுபடக் கூடாத ஒன்று, என்று அஞ்சி ஒதுங்கியிருக்கலாம். அவ்வாறு அவர்கள் அஞ்சி ஒதுங்கும்படி இவ்வியக்கம் வன்முறைகளைக் கொள்கையாகக் கொண்டதோ, சட்டத்திற்குப் புறம்பானதாகவோ இராது. ஆனாலும் அவர்களில் சிலர்க்கு இயல்பாகவே உள்ள கோழைத்தனத்தாலும், காலத்திற்கேற்ப இடத்திற்கேற்ப வளைந்து கொடுத்துத் தாங்கள் மட்டுமே நன்கு வாழக் கற்றுக் கொண்டதாலும், இதில் பங்கு கொண்டால் ஆளுங்கட்சியினரின் வெறுப்புக்கு ஆளாக வேண்டியிருக்குமோ என்று அஞ்சி இதில் பங்கு கொள்ளத் தயங்குவர்; அல்லது மயங்குவர். அப்படிப் பட்டவர்கள் இருப்பது என்றுமே இயல்பாகலின், அவர்களைப் பற்றி நாம் கவலைப் படவும் வேண்டியதில்லை; அவர்களைப் பொருட்படுத்தவும் தேவையில்லை.

ஆனால், எப்பொழுதுமே எதிலுமே ஒரு நல் விளைவைக் காண விரும்புபவர்கள், நல்லுலகத்தை உருவாக்க எண்ணுபவர்கள் உலகில் மிகுதியான அளவிலேயே இருப்பர். அவர்கள் திக்காலுக்கொருவராகவே இருக்க முடியும். அப்படிப் பட்டவர்களை ஒருங்கே கூட்டி, சில பல நல்ல முயற்சிகளைச் செய்ய வேண்டியே இவ்வியக்கம் தொடங்கப் பெறுகிறது. ஆகவே, இதில் அனைவரும் ஈடுபட்டுப் பயன் விளைக்க அன்புடன் அழைக்கின்றோம். திறந்த உள்ளத்துடன் வேண்டுகின்றோம். இதில், ஒவ்வொருவரும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் முன், அவர்களின் ஆதரவைக் காட்ட, இதற்காகும் பொருட் செலவைப் பொருட்படுத்தாமல், இதன் தொடக்க மாநாட்டிற்குத் தவறாமல் வருகை தர வேண்டும் என அழைக்கின்றோம். மாநாட்டுக் கூட்டத்தைப் பார்த்து மற்றவர்கள் வியக்க வேண்டும். மாற்றார்கள் மூக்கின் மேல் விரலை வைக்க வேண்டும்! அப்பொழுதுதான், நாம் ஒழிக்க விரும்பும் தீமைகள் அஞ்சும்! அல்லவை தேயும்! அதனையொட்டித்தான் நாம் உருவாக்க விரும்பும் நன்மைகள் கைகூடும்! நல்லவை வளரும்! எனவே, மீண்டும் மீண்டும் வேண்டுகிறோம். மாநாட்டை எவரும் ஏனோதானோ என்று கருதிப் புறக்கணித்து விடவேண்டாம். எல்லாரும் ஒரே உணர்வுடன், ஒரே கொள்கையுடன், ஒரே முழக்குடன் ஒன்று சேர்வோம்! வரும் துலை ௨௨, ௨௩ (நவம்பர் 7 8,)-ஆம் நாள்களில், சென்னை, பெரியார் திடலில் ஒன்று திரள்வோம்! கொள்கை முழக்குவோம்! இயக்கம் தொடங்குவோம்! எந்தமிழ் இனத்தைக் கட்டமைப்போம்! வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்! வளம் பெறுக தமிழ் நாடு!



www.thamizham.net - Free E book No 7515

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு,

**(ULAGA THAMIZHINA MUNNETRA KAZHAGAM ORGANIZING CONFERENCE)**

**(A PROGRESSIVE MOVEMENT OF THE TAMILIAN PEOPLES)**

**[சென்னை, பெரியார் திடல், துலை உஉ, உங (7, 8-11-81)]**

## அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

வணக்கம். நிகழும் திருவள்ளுவராண்டு, துலை (ஐப்பசி) மாதம் உஉ, உங (1981 நவம்பர் 7, 8)-ஆம் பக்கல்களில், சென்னை வேப்பேரி, ஈ.வெ.கி. சம்பத்து சாலையிலுள்ள பெரியார் திடலில்,

**உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்**

என்னும் புதியதோர் இயக்கத்தின்

**தொடக்க மாநாடு**

நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகெலாம் பரந்துபட்டு வாழும் தமிழினத்தின் மொழி, குமுகாயம், அரசியல், பொதுவுடைமை, கலை, பண்பாடு, அறிவியல் என்னும் எழுதுறை முன்னேற்றங் கருதித் தொடங்கவிருக்கும் அப்பேரியக்கத்தின் தொடக்க மாநாட்டில், மிகச் சிறந்த தமிழியல், பொருளியல், குமுகாயவியல் பேரறிஞர்கள் பலர் பங்கு கொள்ளவிருக்கின்றனர். அம்மாநாட்டில் தாங்கள் தங்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் தவறாமல் கலந்து கொண்டும், அப்புதிய இயக்கத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டும், தமிழினக் குடிமை நலம் பேணுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார்
அமைப்பாளர்.

புலவர். இறைக்குருவனார்
செயலாளர்.

மருத்துவர். கோவிந்தனார்.
செயற்குழுத் தலைவர்.

மற்றும்
செயற்குழுவினர்.

தென்மொழி மறை நித்திலையனார்.
செயற்குழுத் துணைத்தலைவர்.

www.thamizham.net - Free E book No 7515

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
## தொடக்க மாநாடு
### நிகழ்ச்சி நிரல்.

**இராசேந்திரன் அரங்கம்**

### I. மாணவர் அரங்கம்.

நாள் : துலை உஉ (7-11-81) காரி.
நேரம் : காலை 9-30 முதல் பகல் 1-30 வரை.

1. இறை வணக்கம் : திருவாட்டி. தேன்மொழி அருளி, அறி. இ.
2. தமிழ் வாழ்த்து :- செல்வி. சித்திரச் செந்தாழை, அறி. இ.
3. தலைவர் அமர்த்தம்
   3-1) முன்மொழிதல் : மணிமுத்து
   ஆசிரியர் 'தமிழ்ச்சுடர்'
   3-2) வழி மொழிதல் : ப. அறவாழி.
   தலைவர் : கு. இராசேந்திரன், க. மு.
   ஆராய்ச்சி மாணவர், தமிழ்த்துறை
   அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
4. வரவேற்புரை : த. தமிழ்த் தென்றல், க. இ.
5. தலைவர் முன்னுரை :
6. உரைப் பொழிவுகள் :
   6-1) தலைப்பு : 'தமிழ்மொழி வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு'
   பொழிவு : புலவர். தாமசு தமிழ்ச்செல்வன், (ஆ. ப)
   அரசினர் கல்வியியல் கல்லூரி, சைதை, சென்னை-15.
   6-2) தலைப்பு : 'குமுகாய வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு'
   பொழிவு : மா. பொழிலன், க. இ.
   6-3) தலைப்பு : 'அரசியல் வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு'
   பொழிவு : செ. கண்ணன், க. இ. (ச. இ)
   சட்டக் கல்லூரி, மதுரை.
   6-4) தலைப்பு : 'பொதுவுடைமை வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு'
   பொழிவு : 1) இரா. திருவாரூரன், க. மு. (மெய். மு)
   பச்சையப்பன் கல்லூரி, சென்னை.
   2) ஐ. து. பாபு மாசிலாமணி,
   3-ஆம் ஆண்டு வணிகவியல்
   ஊரிசு கல்லூரி, வேலூர். வ. ஆ.

www.thamizham.net - Free E book No 7515

6-5) தலைப்பு : 'கலை வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு'
பொழிவு : வை. அறிவுத் தொகையன், க மு.
ஆராய்ச்சி மாணவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6-6) தலைப்பு : 'பண்பாட்டு வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு'
பொழிவு : செல்வி. சித்திரச் செந்தாமரை, அறி. இ.

6-7) தலைப்பு : 'அறிவியல் வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு'
அ. ஆறிறைவன். அறி. மு.
ஆராய்ச்சி மாணவர்,
இந்தியத் தொழில் நுட்பக்கழகம், சென்னை.

7. சிறப்புச்சொற்பொழிவு: பாவலரேறு பெருஞ்சித்திரனார்
8. தலைவர் முடிவுரை :
9. நன்றியுரை : குழந்தை ஈகவரசன்.

(மாணவர் அரங்கம் முடிவு.)

## பாவேந்தர் அரங்கம்

### 2. இயக்கப் பாடல் இசை நிகழ்ச்சி

நாள், நேரம் : 7-11-81 காரி - பிற்பகல் 2-30 முதல் 3-30 வரை.

அறிமுகவுரை : தென்மொழி க. தமிழப்பன்
இசைப்பாடல்கள் : தென்மொழி. சோ. ஆற்றலரசு
தென்மொழி. நா. இளமாறன்
தென்மொழி. ப. முருகவேள்
குழுவினர்.

நன்றியுரை :- புலவர். நாவை-சிவம், இல. இ.

## நிலாட்பிகையரங்கம்

### 3. மகளிரரங்கம்.

நாள், நேரம் : 7-11-81 காரி -பிற்பகல் 3-45 முதல் 9-30 வரை.

1. தமிழ் வாழ்த்து :
2. தலைவர் அமர்த்தம் :

2-1) முன்மொழிதல் : தென்னி. தேவகாந்தி, அறி. மு.
2-2) வழிமொழிதல் : புலவர். அ. ஆனந்தவல்லி, இலக்.இ.

தலைவர் : தமிழீழ விடுதலைக் கூட்டணியின் மகளிரணித் தலைவரும், தமிழின விடுதலை மறத்தியுமாகிய திருவாட்டி.
மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

3. வரவேற்புரை : திருவாட்டி. தாமரை. பெருஞ்சித்திரனார்.
4. தலைவர் முன்னுரை :

www.thamizham.net - Free E book No 7515

5. உரைப் பொழிவுகள் :

5-1) தலைப்பு : 'தமிழ்மொழி வளர்ச்சியில் மகளிர் பங்கு'
பொழிவு : திருவாட்டி. பொற்கொடி இறைக்குருவனார்.

5-2) தலைப்பு : 'பண்பாட்டு வளர்ச்சியில் மகளிர் பங்கு'
பொழிவு : திருவாட்டி. நீர்மலர் கண்ணன்
(நிரசா கண்ணன்)

5-3) தலைப்பு : 'குமுகாய வளர்ச்சியில் மகளிர் பங்கு'
புலவர். திருவாட்டி : சேதுகா முத்துக்குமரன்

5-4) தலைப்பு : 'கலை வளர்ச்சியில் மகளிர் பங்கு'
பொழிவு : புலவர், கார்குழலம்மை, இலக். இ.

5-5) தலைப்பு : 'பொதுவுடைமை வளர்ச்சியில் மகளிர் பங்கு'
பொழிவு : பர். சாலினி இளந்திரையன், க. மு.

5-6) தலைப்பு : 'இசைக்கோலம்'
பொழிவு : கோலக் கலைஞர் ஓவிய அறிஞர்.
சாவி. தம்பிராசு.

6. சிறப்புச்சொற்பொழிவு: பாவலரேறு பெருஞ்சித்திரனார்

7. தலைவர் முடிவுரை :

8. நன்றியுரை : பாவலர் கோ. வா. மு. சேதுராமன், க. மு.
ஆசிரியர் 'தமிழ்ப்பணி'.

## சுந்தரேசனார் இன்னிசை அரங்கம்.

### 4. நடிப்புரை நிகழ்ச்சி.

'வீரத்தாய்'

அறிமுகவுரை : அருட்கையன்.

மெய்ப்பாடு : சிறுமி : நற்செல்வி (சுமதி) —வீரத்தாய்.
சிறுமி : அங்கயற்கண்ணி —வீரமகன்.
சிறுவன் : தமிழ்ச் செம்மல் —வீரத்தந்தை.
சிறுமி : இசைமொழி —வீரத்தாத்தா.

பின்புலவுரை : செங்கதிர்ச் செல்வி (அருணா)

இசை : சிரீபதி இசைக்குழு.

### 5. இயக்க மெல்லிசை நிகழ்ச்சி.

அறிமுகவுரை : தென்மொழி ப. முருகவேள்.

இசையமைப்பு : சிரீபதி.

பாடுநர் : சிரீபதி குழுவினர்
திருச்சி தியாகராசன்.
(திருச்சி உலகநாதன் மகன்)

கருவி இசை : சிரீபதி இசைக்குழு.

நன்றியுரை : தென்மொழி ஆற்றலரசு.

www.thamizham.net - Free E book No 7515

## திருவள்ளுவர் அரங்கம்

### 6. தமிழினக் காப்பு மாநாடு.

நாள், நேரம் : துலை உ௩ (8-11-81) ஞாயிறு
காலை 9 முதல் பிற்பகல் 1-30 வரை:

1. இறை வாழ்த்து :
2. தமிழ் வாழ்த்து :
3. தலைவர் அமர்த்தம் :
   3-1) முன்மொழிதல் : தென்மொழி ப. துரையரசன்
   3-2) வழிமொழிதல் : 1) தென்மொழி ந. முத்துக்குமரன்
   2) புலவர். நெடுமிடல்.
   3) பாவலர். குமர நடவரச சுவப்பனார்.
   4) புலவர். நயம்பு அறிவுடை நம்பி க.மு.
   5) புலவர். எழில்வாணன் இலக். இ.

தலைவர் : தமிழீழ விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் உலகத் தமிழின விடுதலைக் கழக முன்னோடியும் ஆகிய
நாவலர் அ. அமிர்தலிங்கம்

4. வரவேற்புரை : தென்மொழி மறை. நித்தலின்பனார்.
5. தலைவர்க்குப் பாராட்டுரை : பா. மெ. சுந்தரம்.
   (தமிழ்த்துறைத் தலைவர், நெறியாளர், தமிழியல் ஆராய்ச்சி நிலையம், மாநிலக் கல்லூரி, சென்னை.)
6. தலைவர்க்கு வாழ்த்துரை : ப. பத்மநாபன், க. மு; ச. இ.
   (வழக்குரைஞர், சோமனூர்)
7. தொடக்கவுரை : கி. வீரமணி, க. மு; ச. இ.
   (பொதுச் செயலாளர், திராவிடர் கழகம். ஆசிரியர் 'விடுதலை')
8. தலைவர் முன்னுரை :
9. உரைப் பொழிவுகள் :
   9-1) தலைப்பு : 'தமிழினக் காப்பு, தேவையும்-நடவடிக்கையும்'
   பொழிவு : 1) பேரா. கு. வெ. கி. ஆசான், க. மு.
   ('ஆசிரியர் 'இங்கும் அங்கும்')
   2) மீ. சு. இளமுருகு பொற்செல்வி.
   9-2) தலைப்பு : 'தமிழின முன்னேற்றத்தில் மொழியின் இன்றியமையாமை'
   1) கழக இலக்கியச் செல்வர்
   பா. சி. பாலசுப்பிரமணியம் க. மு.
   (பேரா, தலைவர், தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.)

www.thamizham.net - Free E book No 7515

2) புன்மொழிப் புலவர். அகர முதலித்திறனாளர்.
பேரா. மு. ச. சிவம். க. மு
(வாசவி கல்லூரி, ஈரோடை.)

9-3) தலைப்பு : 'இருமொழிச் சீர்திருத்தமும்
தமிழின மறுமலர்ச்சியும்'
1) பர். இரா. இளவரசு, க.மு
(மாநிலக் கல்லூரி, சென்னை.)
2) பர். பொன். கோதண்டராமன் க. மு.
(பொற்கோ) சென்னைப் பல்கலைக் கழகம்.

9-4) தலைப்பு : 'இன்றைய அரசியல் போக்கும்
தமிழினக் காப்பும்'
1) பெரியார் பெருமையாளர்
பேரா. ந. இராமநாதன், க. மு.
2) பாவலர். முகவை. இராசமாணிக்கம்.

9-5) தலைப்பு : 'தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்திய
பொதுவுடைமை'
1) பேரா. சிவகாம சுந்தரி, க. மு.
(அவிநாசிலிங்கம் மனையியற் கல்லூரி, கோவை.)
2) அறிஞர் எசு. குணசீலன். (குறு)
(பன்னூலாசிரியர், வெங்காலூர்)

9-6) தலைப்பு : 'கலை வளர்ச்சியும் மக்கள் மனவியலும்'
1) உவமைப் பாவலர் சுரதா.
2) பேரா. வளனரசு, க. மு.
(தூய யோவான் கல்லூரி பாளையங் கோட்டை)

9-7) தலைப்பு : 'தமிழ் மருத்துவ அறிவியல்'
1) மருத்துவா க. வேங்கடேசன், க. மு.
(ஆசிரியர். 'மூலிகை மணி')

9-8) தலைப்பு : 'உலக நாகரிகமும் தமிழியற் பண்பாடும்'
1) பேரா. தமிழ்க்குடிமகன், க. மு.
(முதல்வர். யாதவர் கல்லூரி, மதுரை).
2) வேலா. அரசமாணிக்கனார்,
(ஆசிரியர் 'குறளியம்')

9-9) தலைப்பு : 'அறிவியல் நோக்கில் மக்களியல் போக்கு'
1) பேரா. சாலை. இளந்திரையனார், க. மு.
(தில்லிப் பல்கலைக் கழகம், புதுதில்லி.)
2) பேரா. கா. அரங்கசாமி, க. மு.
(தமிழ்த் துறைத்தலைவர், கலைக்கல்லூரி, கோபி.)

10. சிறப்புச்சொற்பொழிவு: பாவலரேறு பெருஞ்சித்திரனார்

11. தலைவர் முடிவுரை :

12. நன்றியுரை : ம. செ. தமிழ்மணி.

www.thamizham.net - Free E book No 7515

## 7. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு.

**நாள் :** துலை உஉ (8-11-81) ஞாயிறு.
**நேரம் :** பிற்பகல் 3-30 முதல் இரவு 10-30 மணிவரை.

1. **தமிழ் வாழ்த்து :**
2. **தலைவர் அமர்த்தம் ;**

2-1) முன்மொழிதல் : ச. உணர்வேந்தி, அறி. இ.
2-2) வழிமொழிதல் : 1) அரு. கோபாலன்.
(ஆசிரியர் 'மருமம்' சென்னை.)
2) சுப. திருமாறன்.
3) ச. சின்னத்துரை.

**தலைவர் :** பன்மொழிப் புலவர்
பேரா. கா. அப்பாத்துரை, க. மு.
(முன்னாள் உதவி ஆசிரியர், ஆங்கிலத் தமிழ் அகரவரிசை சென்னைப் பல்கலைக் கழகம்)

3. **வரவேற்புரை :** புலவர். இறைக்குருவனார்.
4. **தொடக்கவுரை :** வே. ஆனைமுத்து, க. இ.
(ஆசிரியர், 'சிந்தனையாளன்', திருச்சி.)
5. **தலைவர் முன்னுரை :**
6. **உரைப்பொழிவுகள் :**

6-1) தலைப்பு : 'உலகமளாவிய தமிழின ஒற்றுமை'
1) பேரா. முத்து. குணசேகரன், க. மு.
(அரசினர் கலைக்கல்லூரி, கடலூர்.)
2) புலவர். த. ச. தமிழன்.

6-2) தலைப்பு : 'உலகத் தமிழினமும் மொழி வளர்ச்சியும்'
1) தமிழ்ப் பேரவைச் செம்மல்,
ஆட்சிமொழிக் காவலர்.
கீ. இராமலிங்கனார் க. மு.
2) ப. அருளி, வணி. இ; ச. இ.
(வழக்குரைஞா, புதுச்சேரி.)

6-3) தலைப்பு : 'உலக நோக்கில் தமிழ்க் குமுகாய மறுமலர்ச்சி.
1) இரா. கசுத்தூரி, க. இ., ச. இ.
(வழக்கறிஞர், கோவை.)
2) புலவர். பழநி மாணிக்கம்.

6-4) தலைப்பு : 'உலகத் தமிழினமும் அரசியல் மேலாண்மையும்'
1) ஏ. எசு. மணவைத்தம்பி.
(தலைவர், இலங்கை குடிபெயர்ந்தோர் நல உரிமைச் சங்கம்)

www.thamizham.net - Free E book No 7515

2) இர. டேவிட்சன் செயச்சந்திரா, க. மு.
(செயலாளர், ஊற்றங்கரை தமிழ்ச்சங்கம்.)

6-5) தலைப்பு : 'பொதுவுடைமைக் கொள்கையும் தமிழின மறுமலர்ச்சியும்'
1) கு. ச. ஆனந்தன், வணி. இ. ; ச. இ.
(வழக்குரைஞர், கோபிசெட்டிபாளையம்.)
2) அ. இறையன், க. இ., ப. இ.
(தலைவர் பகுத்தறிவு ஆசிரியர் அணி, சென்னை.)

6-6) தலைப்பு : 'மன, அறிவு வளர்ச்சியும் கலைகளின் பங்கும்'
1) புலவர். தி. நா. அறிவு ஒளி, க. மு.
2) சி. அரசிறைவன், அறி. இ.
3) உயிரோவியக் கலைஞர்
ச. இறையருள் (பெனடிக்டு)
(அமைப்பாளர் உலகத் தமிழ்க் கல்வி கலை, பண்பாட்டுக் காப்புக் கழகம்).

6-7) தலைப்பு : 'உலகத் தமிழின நோக்கில் தமிழியற் பண்பாடு'
மறைமலையடிகளாரின் திருமகனும் திருமுறைச் செல்வர்,'
1) பேரா. மறை. திருநாவுக்கரசு.
2) நினைவுக்கலையேந்தல், பதின்கவனகர்
திருக்குறள் பெ. இராமையா.

6-8) தலைப்பு : 'தமிழின முன்னேற்றத்தில் அறிவியல் ஈடுபாடு
1) மா. பூங்குன்றன், அறி. இ; க. மு.

6-9) தலைப்பு: 'தமிழின முன்னேற்றத்தில் சாதியத்தின் அழிவுகள்'
1) புலவர். இரா. சிங்காரம், க. மு.
2) புலவர். த. முல்லை வழுதி.

6-10) தலைப்பு : 'உலகத் தமிழின் உரிமை மீட்பு முயற்சிகள்'
1) ஈழவேந்தன்.
(தமிழீழ விடுதலைக் கூட்டணியின் கொழும்புச் செயலாளர், தமிழின விடுதலை மறவர், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர்)
2) என். எசு. பழனிச்சாமி. க. மு.
(தலைவர். கோவை மாவட்ட உழவர்கள் கழகம்)

7. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்கவுரையும், கொடியேற்றுதலும், கொள்கை, இலச்சினை விளக்கங்களும், பாவலரேறு பெருஞ்சித்திரனார், (அமைப்பாளர்)
8. தலைவர் வாழ்த்துரையும் முடிவுரையும் :
9. தீர்மானங்கள் :
10. நன்றியுரை : அ. மழலைச் செல்வன்.
11. தமிழின ஒருமைப் பாடல்.

(மாநாடு முடிவுறுதல்)

www.thamizham.net - Free E book No 7515

கருத்துரை மடல் : 2.

# உ. த. மு. க. அமைப்பும் இயக்கமும்

அன்பிற்கினிய தமிழ் நெஞ்சத்திற்கு, அன்பு வணக்கம்.

உலகத் தமிழினம் விழித் தெழ, உ. த. மு. கழகத்தைக் காணத் துடிக்கும் தங்களின் உள்ளத்து எண்ணங்களை உள்ளபடியே உணர்ந் தேன். தங்களின் முயற்சி, வெறும் உணர்ச்சியால் எழுந்திட்ட கிளர்ச்சியன்று என்பதை மட்டும் புரிந்து கொண்டேன். உணர்ச் சியும் எழுச்சியும் மேலோங்கத் தக்க தலைப்புகளை கொண்டு அமைப்புகள் தோற்றுவிப்பது பெரிதன்று. உண்மையிலேயே உலகத் தமிழினத்திற்கு - அது முன்னேறுவதற்கு ஓர் அமைப்பு தேவை என எண்ணுவோமானால், அதில் யார் யார் உறுப்பாண்மை பெறலாம்; யார் யார் உறுப்பாண்மை பெற்றால் 75 விழுக்காட்டு உரிமைகள் மட்டுமே உண்டு என்ற நெறி முறைகளை நீங்கள் அறுதி யிட்டு வகுத்திருக்கக் கூடும்; வகுத்திருக்கக் வேண்டும். உ. த. மு. கழகத்திற்கு (விழிக்கு ஒளி எவ்வளவு தேவையோ அது போல) இந்த நெறி மிக மிகத் தேவை. நாம் தமிழர், நாம் இந்தியர் என்று, பொருள்களை வாரி வழங்கி, நமது அன்பைப் பெற்றுப், பின்னர் ஆட்டிப் படைப்பவர்களாக - நம்மை அழிப்பவர்களாக மாறிடும் - பச்சோந்திகளுக்குச் சற்றும் இடந்தரலாகாது.

இவ்வாறு தோற்றுவிக்கப்படாதவை எல்லாம் இறுதியில் வேற்று மாநிலத்தவர்களால் கொண்டு நடத்தப்படுவதாக - அமைப்புகள் அமைந்து வருவதை நாம் கண்டு வருகிறோம். ஏணியை உருவாக்கி வேற்றினத்தினரை ஏற விட்டு, ஏணியையும் பறிகொடுத்து, இல்லக் கிழத்தியையும் பறிகொடுக்கின்ற நிலையை அடைந்த பின், சிந்திப் பவனாக மட்டும் தமிழனின் நிலை இருக்கின்றதே யன்றி, வருமுன் காக்கும் வழி தெரிந்தும், அறியாத குருடனாக, மேடையிலேறிக் கோடையிடியென முழங்கிப் பிதற்றிடும் தமிழராக எண்ணிக்கைகள் உயர்ந்து வருவதை நாம் உடனடியாக நிறுத்தியாக வேண்டும்.

தமிழினின் வாழ்வுயர்வுக்கு விடிவு காணத்தக்க வழிமுறைகளைப் பற்றி ஆராய்ந்திடாது, மக்களை மடயர்களாக்கத் தக்க முறையில், திசை திருப்பித், தமிழ்மொழியில் ஆராய்ச்சி (என்ற தலைப்பில் ஒட்டு மொத்தமாகக் கூடிய பின் ஆங்கிலத்தில் ஆராய முற்படுகின்ற இழிந்த நிலை) செய்து தமிழன் அப்படி வாழ்ந்தவன், இளங்கோ இப்படி வாழ்ந்தான் என்றெல்லாம் (இன்றைய தமிழ் - நிலத்தில் தமிழன் பாம்பே மாத்துங்கா பகுதியில் எச்சிலைக்காகக் கடித்து உதறும் நாயுடன் சேர்ந்து போட்டியிடுகின்ற நிலைக்கு,யார் காரணம், தமிழக அரசில் ஆட்சியின் மேல் மட்டத்தில் உயர்ந்த பதவியில் இருக்கும் வேற்றினக்காரர்களால் ஏற்பட்ட வேலை வாய்ப்பில்லாத நிலையா? என்பன போன்றவற்றை ஆராயாது) கூச்சலிட்டுச் சிலப்பதிகாரத்திலே, சிலப்பதி என்றாலே திருப்பதி, காரம் மட்டும் கோரமாக மடிந்து விட்டது என்றெல்லாம் வரலாறு உண்டு என்று பறை சாற்றும் வகையில் ஈடுபட்டு, இன்றைய வாழ்க்கைக்

www.thamizham.net - Free E book No 7515

குத் தேவையான கருப்பொருளைப் பற்றி ஆராய மறுக்கின்ற இழிந்த தமிழர்களை பச்சோந்தித் தமிழர்களை ஒட்டு மொத்தமாக ஒதுக்கி வைத்து விட்டுத் தமிழின விடுதலைக் கோட்டையின் திறவு கோலை முடுக்கிடுக என்று உளமார வாழ்த்துகின்றோம்.

சீன மொழியைப் பேசத் தெரிந்த தமிழன் எத்தனைத் தலைமுறையாக சீனாவில் வாழ்ந்திருந்தாலும், அவன் சீனனாகிட முடிவதில்லை. அந்தக் குழுகாயம் அவனை ஒட்ட விடுவதில்லை ; அவர்களின் இனப் பற்று அவ்வாறு. அவ்வளவு ஏன், மலையாள மொழிகளைப் பேசத் தெரிந்த தமிழன் - இன்னும் தெலுங்கு, மராட்டிய, கன்னட, இந்தி, பஞ்சாபி; மலாய், பர்மிய, ஆங்கில மொழியைப் பேசத் தெரிந்த தமிழன் அந்த மொழிக்குரியவனாகிட முடிவதில்லை. தமிழை மட்டும் பேசத் தெரிந்த வேற்றினக்காரர்களை அவர்கள் யார் என அறிந்தும் அடையாளம் தெரிந்தும் அவர்களும் தமிழர்கள்தாம் என ஏற்றுக் கொண்டு, மண்டபத்தின் நடுவிலே,தமிழர்களின் அரசியல் அமைப்பு களிலே, பண்பாட்டு அமைப்புகளிலே, கல்வி, தொழில், மருத்துவக் கல்லூரி போன்ற அமைப்புகளிலே, அவ்வளவு ஏன் உ. த. மு. கழகம் போன்ற அமைப்புகளிலே அவர்களையும் சேர்த்து அவர்களுக் கும் 100 விழுக்காட்டு உரிமைகள் அளிப்போமானால், நம்மைப் போன்ற வடிகட்டின கருத்துக் குருடர்கள், தமிழினப் பகைவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள் என்பது கண்கூடு.

வேற்றினக்காரர்களுக்கு (Associate Member) கூட்டு உறுப் பினர்கள் என வகுத்து அவர்களும் இணையலாம்; ஆனால் ஒப்போலை உரிமை கிடையாது' எனத் திட்டவட்டமாகச் சட்டம் வகுத்திட வேண்டும். காரணியங்கள் பல கூறலாம்; ஆனால் தமிழின விடுதலைக்கு — முன்னேற்றத்திற்கு — இஃது ஒன்றே அச்சாணி. இதிலிருந்து நீங்கள் நழுவினீர்களானால் தமிழும் தமிழகமும் அழிய மேலும் வித்திட்டவர்களாவீர்கள். நாம் தமிழின விழிப்பும், அரசியல் பொருளியல், தொழில் வளர்ச்சி, கல்வியில் மேம்பாடு, காணியில் விடுதலை, இவற்றைக் காண வேண்டுமென்ற கருப்பொருளைப் பற்றிய ஆராய்ச்சியில் எத்தனை முறைவேண்டுமாலும் கூட்டங்கள் நடத்தலாம். அதனால் பயன் உண்டு.

நமது அடுத்த வீட்டுக்காரத் தமிழ்க் குடும்பம் (இலங்கையில்) சிங்களக் குக்கல்களால் கடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர் ; அந்தக் கொடுமையை உலகறியச் செய்ய இந்த உ. த. மு. க. முதல் கூட்டம் பயனளிக்கட்டும். உ. த. மு. க. உலகத் தமிழர் பாது காப்பு அரணாகத் திகழ்ந்து மாற்றின வல்லாண்மையை அடியோடு சாய்த்திடத் தமிழனின் தலையை நிமிரச் செய்திட வாழ்த்துகின்றோம். எல்லோருக்கும் பொதுதான் உ.த.மு.க.எல்லோரும் தலைமைப்பொறுப் பேற்கலாம்; உ. த. மு. க. வில் எல்லோருக்கும் சம உரிமைதான்; என்றால் உ. த. மு. கழகத்தால் எந்தப் பயனும் நேரப்போவதில்லை.

— ம.தே. தமிழன், இலண்டன், ஈ-6.

www.thamizham.net - Free E book No 7515

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் வரவேற்பும் வாழ்த்தும்

### தமிழ்த்தாய்க்கு அணிசேர்க்கும் பணி.

... உ. த. மு. கழகத் தொடக்க மாநாடு பெருவெற்றியுடன் திகழ எனது நெஞ்சம் நிறை உவகையினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த் தாய்க்கு அணிசேர்க்கும் பணியில் என் பணி ஒரு சிறுதுளியாயினும் இருக்க வேண்டும் ... !

—புலவர். ஆ. பழனியாண்டி, தமிழாசிரியர். திருமழிசை, சென்னை-56.

### தமிழ்ப்பணி !

... அறிக்கை கண்டேன். என்னால் இயன்ற தமிழ்ப் பணியைச் செய்யலாமென எண்ணம் ... இவ்வளவு நாட்கள் வாளாவிருந்தமைக்கு மன்னிக்க வேண்டுகின்றேன்.

— புலவர். தி. மு. இராசமாணிக்கம், ஈரோடு-3.

### நன்கொடை திரட்ட விருப்பம்!

.. மாநாடு நடப்பதற்காகவும் இயக்கத் தொடக்கத்திற்கெனவும் துணையாக நன்கொடை திரட்டி அனுப்ப விரும்புகிறேன்.

—அழ. ஆறுமுகம், 'பெருஞ்சித்திரனார் பதிப்பகம்', கூழியிறை.

### புத்துணர்வு ! புதிய நம்பிக்கை !

தண்டமிழ் நெறியும் தமிழர்தம் வாழ்வும்
மண்டு புகழொடு மாநிலம் தழைக்கும்
தொண்டில் உயிர்உடல் அனைத்தையும் வைத்தோய் !
பண்டை மெய்ப்பொருள் ஆயும் புலமையைக்
கண்டனம் ; மெய்ப்பொருள் பாவல ரேறே !
உண்டனம் செந்தமிழ்ச் சுவைக்கனிச் சாறுய்ப்
பண்டைத் தமிழ்நெறி பரவிட
மண்டுமின் ஞாலத் தமிழினக் கழகமே !

... இனத்தால், மொழியால் உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்தும் ஓரமைப்பு தமிழகத்தில் தோன்றித் தக்கார் அதற்குத் தலைமையேற்றிட வேண்டுமென்று நீண்ட நாட்களாக எண்ணி வந்த எம் போன்றவர்க்குத் தங்களின் அறிக்கை ஒரு புத்துணர்வையும் புதிய நம்பிக்கையையும் ஊட்டியது ! இங்குள்ள தென்மொழி அன்பர்களை இணைத்துக் கொண்டு, எம்மால் இயன்றவற்றை ஆற்றுதற்குக் கடமைப் பட்டுள்ளேன்.

— பாவலர். அ. பு. திருமாலன், செலமா, மலேசியா.

www.thamizham.net - Free E book No 7515

### தமிழனுக்கு இனியாவது விடிவு வாராதா ?

—அடிமையுரமேறிய தமிழனுக்கு இனியாவது விடிவு வாராதா ? உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் வழி இழுத்துச் செல்லுங்கள். 'எனக்குப் பின் உள்ள எச்சமே நான் யார் என்பதை உலகுக்கு உணர்த்தும்' என்ற வரிகளை மெய்ப்பியுங்கள்.

— மணிமொழியன், வடக்குப்பட்டி, களமாவூர்.

### தொய்ந்துபோன தமிழினத்தை ஈடேற்ற ... !

...எப்போதோ ஒருமுறை தங்களை நான் பார்த்து மகிழ்கின்றேன் என்றாலும், தாங்கள் இருக்கும் திசைநோக்கி, இறைவா ! இத் தொய்ந்து போன தமிழினத்தை ஈடேற்றுவதற்கு, மொழி ஞாயிறு விடத்தில், எம் பேராசான் பாவலரேறு நலமுடனிருந்து பாடாற்ற அருள்வாயா என்று வேண்டிக் கொள்கிறேன் ...

— கி. பெருமாள், கோட்டூர் மலையாண்டிப் பட்டினம்.

### தமிழினத்தைத் தட்டியெழுப்பும் முதற்பணி !

... உங்கள் பணிகளைப் பற்றி நன்கு அறிவேன். உங்கள் உயரிய நோக்கம் வெற்றிபெற்றுத் தமிழினம் மேம்பாடு அடைந்தால் மிகவும் மகிழ்ச்சியடைவேன் ... மயங்கிக் கிடக்கும் தமிழினத்தைத் தாங்களும் தங்கள் கழகமும் தட்டியெழுப்பும் பணியே முதற்பணியாக அமைய வேண்டும்...அண்மையில், மதுரைப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது, தாங்கள் நொந்த உள்ளத்துடன் பேசியவை எனக்கே மனந்தளரச் செய்தன. அதற்கு மாற்றாகப் புதிய இயக்கம் தோன்றிப் புத்துணர்வு ஊட்ட விழைவது மிகவும் மகிழ்ச்சி தரவல்லதாகும் ... — அன்பு. சுப்பிரமணியம், மதுரை-1.

### ... ஆர்வமிருந்தும் ... !

... எதிர்பாராது நம் விழா நடைபெறுகின்ற அதே நாள்களில் அவர்களும் (புலு தமிழ் மன்றத்தினர்) நிகழ்ச்சி அமைத்துள்ளதால், நான் அங்குச் செல்ல வேண்டியவனாக இருக்கிறேன். மாநாட்டில் கலந்து கொள்ள ஆர்வமிருந்தும் இயலாது போனமைக்கு வருந்துகின்றேன் ...

—சிலம்பொலி. சு. செல்லப்பன், தமிழ் வளர்ச்சி இயக்கம், சென்னை-1.

### தமிழினம் உணர்வு நிறைவாய் விழித்தெழுகிறது !

... எவ்வினமும் தம்முரிமை இழந்து வாழ்ந்திட எந்நாளும் எண்ணுவதில்லை. ஞாயிறு இறவாத மாநிலம் ஆண்ட வெள்ளையர் இன்று கூனிக் குறுகிப் போய், இன்று தமது சின்னஞ்சிறு தீவில் கூட ஒழுங்காய் ஆளமுடியாமற்போன அவலத்திற்குக் காரணம் அவர்களின் இனவெறியே ! தன்னினம் வாழப் பிறவினத்தை மாய்க்க நினைக்கும் எவரும் இவ்வாறு பட்டொழிந்து போவரென்பது திண்ணம் ... ஐரிசு விடுதலைப் படை தனது இலக்கான இன நலத்தை அடைந்தே தீரும்; ஐயமில்லை. ஆனால் தமிழன் ... ? வினவுக்குரிய-

www.thamizham.net - Free E book No 7515

-தாய் இருந்து வந்த இவ்வினம், இதோ, இன்று, இந்த விடியலில் உணர்வு நிறைவாய் விழித்தெழுகிறது. தட்டி யெழுப்பிய தலைவனைத் தொடர்ந்து தன்னின விடுதலை, தன்னாடு கண்டிட அணியாய் அலை யாய்த் திரள்கிறது. இப் படை தோற்கின் எப்படை வெல்லும்? தமிழனென்று சொல்கிறேன். தலைநிமிர்ந்து நிற்கிறேன். வாழ்க உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்! வெல்க தமிழினம்! உலகத் தமிழர்களே! ஒன்றுபடுவோம்! — **நிழல் வண்ணன்**, சித்தோடு.

## தமிழின மக்கள் விழிப்படையச் செய்யுங்கள்!

... நாங்கள் அனைவரும் உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாட்டிற்கு வருவதற்கு ஆயத்தமாக உள்ளோம் ... தங்களைப் போன்ற தன்னலமற்ற சான்றோரை எங்கள் வழிகாட்டியாக, அறிவுப் பேராசானாகக் கொண்டு வாழ்வதில் மன நிறைவு ஏற்படு கிறது ... தாங்கள் இறையருளால் நல்ல உடல் நலத்துடன் நெடிது, வாழ்ந்து, இந்தத் தமிழின மக்களை விழிப்படையச் செய்து, தமிழ் மொழியின் முதன்மை, செம்மை, தலைமை ஆகியவற்றை உலகுக்கு உணர்த்துங்கள் என்று வாழ்த்துகிறோம் ...

— மருத்துவர். அ. **விசுவநாதன்**. மரு. மு; அறு. மு;
**வி. தாமரைச் செல்வி**, அறி. மு., சின்னசேலம்.

## உங்களின் அடியொற்றி நடக்கிறோம்!

...நவம்பரில் நடக்கவிருக்கும் நம் இயக்கத்தின் மாநாடு பற்றி யும், இன்னபிற அறிக்கைகள் பற்றியும் தென்மொழி வாயிலாக அறியப் பெற்றேன்...எங்கள் அறிவு தென்மொழியால் தெளிவாக்கப் பட்டது. எங்கள் உயிர் அதற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஏழ்மையான வயிற்றில் பிறந்து விட்டோமே தவிர, உண்மையான தனித்தமிழர்களாக வாழ விரும்புகிறோம். உங்களின் அடியொற்றி நடக்கிறோம் ...

— **சி. ப. கலைமாணிக்கம்**, சிங்காநல்லூர், கோவை-5.

... தென்மொழி (சு. 18; ஓ. 1) கண்டோம்; களிப்புற்றோம். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டு அறிக்கை என்பதை விட, தமிழன் என்பவன் யார், உலகக் கலைகளில் பண் பாடுகளில் நாகரிகங்களில் தலை சிறந்தது தமிழர்களுடையது என்ப வற்றை தெள்ளத் தெளிவாக விளக்கியிருந்தீர்கள். அது மட்டுமன்று. அவ்வாறு வாழ்ந்த தமிழன் இன்று வந்தேறிகளின் முறுவல் பேச் சிலே, கயமைச் சொல்லிலே மயங்கி, வாழ்வையும் வண்டமிழ் நிலத் தையும், அவன் உயிருக்கொப்பான மொழியையும் இழந்திடும் வண்ணம், அறிவு கெட்ட தமிழனாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றான் என்றே எண்ணத் தோன்றுகிறது. ...உண்மையை உணர்ந்த பின், திருந்தி, மொழிப்பற்றுடனும், இனப்பற்றுடனும், தாய்நாட்டுப் பற்றுடனும் வாழ வேண்டியது தமிழர் கடன் இல்லையா?

www.thamizham.net - Free E book No 7515

# பேரியக்கம் படைக்க வாரீர்!

புலவர். ப. எழில்வாணன், இலக். இ.

தமிழ்வாழ நமதினம் வாழத்
  தமிழர்களை ஒன்று சேர்ப்போம்;
அமிழ்தான தனித்தமிழ் பேண
  அனைவருமே ஒன்று சேர்வோம்;
திமிரான நமக்கெதி ரான
  திட்டங்களை மென்று கொல்வோம்;
உமிபோல வெறும்பதர் போல
  உழல்வோரைக் கண்டு கொள்வோம்! ... (1)

தெளிவாகப் பயனுரு வாகத்
  தேர்ந்தவினை நாளும் செய்வோம்!
புலியாக ஒருமுக மாகப்
  புறப்படவே சேர்ந்து நிற்போம்;
அலியாக ஒருசுமை யாக
  அலைவோரை வீழ வைப்போம்!
இலியாக மிடியுள ராக
  இருப்போரை வாழ வைப்போம்! .... — (2)

இருபுனைவு தனிக்கலை யாக
  ஏய்ப்போரை ஒந்தி என்போம்;
வருங்காலம் தமிழ்க்கொளி யாக
  வாழ்வாரை வாழ்த்தி நிற்போம்!

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இனியும் இது போன்ற உரைகளே தொடர்ந்து வருவது, பல கோடி மரமண்டைகளுக்கு நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படும். எனவே, இன எழுச்சி எழுத்துகளையே விதைத்திடுக என வேண்டுகின்றோம். 'தன்மானத் தமிழன் எழுந்திட்டான்; தரையில் தன் கொடி ஏற்றிட்டான்' என்னும் அளவிற்கு இங்குள்ள தமிழர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழுவினர் பெருமிதக் களிப்பில் ஆழ்ந்து உள்ளனர். பன்னெடுங் காலமாகத் தமிழனின் நலம் பேண ஓர் அமைப்பு உலகில் இல்லையே என்ற ஏக்கத்தால் 1975-ஆம் ஆண்டு பொங்கலின் போழ்து, பொங்கலோடு பொங்கிய உள்ளக் கிளர்ச்சியால் எழுந்தது, உலகத் தமிழர் முன்னேற்றக்கழகம், இலண்டனிலே! அதுபோன்ற அமைப்பு, தாய்நாடான தமிழகத்திலே தோன்றியமை உண்மையிலேயே உள்ளக் களிப்பை ஏற்படுத்தியுள்ளது. மகிழ்வு மட்டுமன்று; எங்கள் மனம் நிறைந்த பாராட்டுகள் என்றும் உண்டு. கிளைகள்பல உலகம் முழுமையும் தோற்றுவிப்பது தேவைதான். தெளிவான நெறிமுறைகட்கு உட்படுத்தியே கிளைகளைத் தோற்றுவிக்க வேண்டும். — **செயலர், தமிழர் முன்னேற்றக் கழகம், இலண்டன்.**

www.thamizham.net - Free E book No 7515

அறிவோடும் உளத்துணி வோடும்
வருவோரை அன்பு செய்வோம்!
மருந்தோடும் பலதுறை யோடும்
மாத்தமிழை ஒன்ற வைப்போம்! ...... (3)

மடியோடும் பெரும்பழி யோடும்
வாழ்ந்துவந்தோம்; சூடு பட்டோம்!
இடியோடும் தனிமதி யோடும்
இன்றெழுந்தோம்; வெற்றி கொள்வோம்!
அடியோடு தமிழ்த்தளை வீழும்;
ஆர்த்தெழுந்தோம்; நன்று செய்வோம்!
விடிவாகும்; நமக்கினி வாழ்வும்
மேலோங்கும்; வாய்மை சொல்வோம்! ... (4)

எதிர்காலம் புதுவகை யாகும்;
இளைஞர்களே எண்ணிப் பாரீர்!
இதுநேரம் இயக்கமொன் றாகும்;
இனிதாக வந்து சேரீர்!
அதிகாலைக் கதிர்வர வாகும்;
அதன்பின்னே நன்மை காணீர்!
புதுவாழ்வும் இனி, தமிழ்க் காகும்;
புறப்பாட்டைப் பாடி வாரீர்! ...... (5)

தனிநாடும் தனித்தமிழ்(து) ஆகும்;
தமிழர்களே பாய்ந்து வாரீர்!
தனிவீடும் திருக்குறள் பாடும்;
தண்டமிழைக் காக்க வாரீர்!
துணிவோடும் தமிழ்நினை வோடும்
தொல்லைகளைப் போக்க வாரீர்!
பிணியோடத் தமிழ்ப்பொலி வோடும்
பேரியக்கம் ஆக்க வாரீர்! ...... (6)

## வெளிநாடு சென்றும் தென்மொழி நினைவகலாத மெய்த்தொண்டர் மகிழ்நன்.

திருச்சி, திருவெறும்பூர் 'நற்றமிழ்ப் பேரவை' அமைப்பாளர் நாரா. **மகிழ்நன்** அண்மையில், தம் அரசுப் பணித் தொடர்பாக, தென்னாப்பிரிக்காவிலுள்ள **லிபியா** நாடு சென்று நான்கைந்து மாதங்கள் இருந்து, தமிழகம் திரும்பியுள்ளார். அவர் நல்வரவை வாழ்த்துகிறோம். வெளிநாடு சென்றும் 'தென்மொழி'யை மறவாத அத் தூய மெய்த் தமிழ்த் தொண்டர் தென்மொழி அலுவலகத்திற்கென, இரண்டு ஊசி தைப்புப் பொறிகளை **(Stapling Machines)** வாங்கி வந்து அன்பளிப்பாகத் தந்துள்ளார். அவர் நல்லுளத்தைப் போற்றித் தென்மொழி நன்றி கூறுகிறது.

www.thamizham.net - Free E book No 7515

# அரேபியா சென்ற ஓர் அன்பரின் மடல்!

அன்புமிக்க ஐயா அவர்களுக்கு வணக்கம். நலம். விழைவதும் அதுவே. நான் கடந்த 15-7-81 மாலை 7 மணியளவில் வானூர்தியில் பம்பாயிலிருந்து புறப்பட்டு, இரவு 8-30 மணிக்கு தஃகரான் வந்து சேர்ந்து, இரவு 12 மணிக்கு நான் பணியாற்ற வேண்டிய குழுமத்திற்கு வந்து பணியாற்றிக் கொண்டுள்ளேன்.

நான் ஓர் ஆய்வகத்தை அமைக்கும் பணியையும் அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுள்ளேன். இந்த நாட்டுச் சட்டப்படி ஒவ்வொரு சாலையையும் அமைக்கும்போது, அதன் வெவ்வேறு அமைப்பு நிலைகளில் ஆய்வுகள் செய்து, அறிக்கையை அரசு நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டும். ஆய்வறிக்கையில் செப்பமாக அமைத்திருப்பதாகக் குறித்திருந்தால்தான் அரசு மேற்கொண்டு, பணியாற்ற அனுமதிக்கும். ஒவ்வொரு நிலையிலும் அரசு அதிகாரிகளும் உடனிருந்து ஆய்வுகளைக் கவனிக்கிறார்கள்.

இங்கு எங்கள் குழுமத்தில் உலக நாடுகள் அனைத்திலிருந்தும் ஆண்கள் வந்து, வெவ்வேறு நிலைகளில் பணியாற்றுகின்றனர். அந்தந்த நாட்டவர் தனித்தனியாகப் பிரிந்து பேசிக்கொள்கின்றனர். அஃது ஒன்றுதான் பொழுதுபோக்கு. தங்கியிருக்கும் இடத்தை விட்டு வெளியில் செல்லவேண்டுமானால் செல் இசைவு (Pass) தேவைப்படுகின்றது. அதை சவுதி அரேபிய அரசு (Kingdom of Soudi Arabia) வழங்குகிறது. அது பெற்ற பிறகுதான் நான், தங்கியுள்ள இடத்தை விட்டு வெளியில் செல்ல முடியும். செல்லிசைவு (Pass) இன்றி வெளியில் செல்ல நேரிட்டுக், காவலர் பிடித்து விட்டால் 3 நாட்கள் சிறையிருப்பும், 300 றியால் (உரு 750/-) தண்டமும் கட்ட வேண்டும். சிறையில் இருக்கும்போது உணவு கிடையாது. இது போன்ற மிகக் கடுமையான இன்னும் பல சட்டங்கள் உள்ளன.

இங்குள்ள எங்குமே வெறும் மணற்பரப்பாக உள்ளது. அங்கங்கே சிறு மணற் பூண்டுகளைத் தவிர, நிலைத்திணைகளே இல்லை. இந்தப் பாலையின் குறுக்கிலும் நெடுக்கிலும் சாலைகள் அமைத்துக் கொண்டுள்ளனர். நான் உள்ளபகுதி தஃகாரன் வானூர்தி நிலையத்திற்கும், அல்கோபார் நகருக்கும் இடையில் உள்ளது. தஃகரான், வானூர்தி நிலையத்திலிருந்து 8 அயிர மாத்திரி (கி. மீ.) தான் இருக்கும். இங்கிருந்து, வடகிழக்கில் 18 அ. மா. தொலைவில் தமாம் என்னும் நகரம் உள்ளது. இந்த மூன்று நகரங்களும் திட்டமிட்டு விரிவாக்கப்படுகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் இந்த மூன்று நகரங்களும் இணைந்த ஒரு பகுதியாக இவ்விடம் மாறிவிடலாம்.

இங்குள்ள பாலைவனத்தைச் சோலையாக மாற்ற இந்த நாட்டு அரசு கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டுகின்றது. மொத்த செலவில் பகுதியை அமெரிக்க நாடும், மிகுதியை மற்ற நாடுகளும் பங்கிட்டுக் கொள்ளுகின்றன. இங்குள்ள நெடுஞ்சாலைகளில் நடப்

www.thamizham.net - Free E book No 7515

பவர்களே இல்லை. பேருந்துகளும், மகிழுந்துகளும் வினாடிக்கு ஒன்று அல்லது இரண்டு மேனி 'விர் விர' என்று மணிக்கு 150-200 அயிர மாத்திரி வேகத்தில் செல்லுகின்றன. சாலைகள் அனைத்தும் அகலமாகவும் செப்பமாகவும் உள்ளன. சாலையைக் கடக்கும் போது நம் ஊர்போல் பேசிக் கொண்டு மெதுவாகக் கடக்க முடியாது. ஊர்திகளை மிகுந்த வேகத்துடன் ஓட்டுகின்றனர். வெகுதூரத்தில் வண்டி வரும் போதே ஓடிச் சென்றுதான் கடக்க வேண்டும். இங்கு உள்ள உள்நாட்டவர் அனைவரும் மகிழுந்து வைத்துள்ளனர்.

இங்கு வெய்யில் மிகவும் கொடுமையாக உள்ளது. வெய்யிலைப் காணும் போதே கண்கள் சுருங்குகின்றன. வெய்யில் கண்ணைக் பறிக்கும் ஒளியுடன் உள்ளது. நண்பகல் அனற்காற்றும், புழுதிப் புயலும் வீசுகின்றன. எனக்கு எங்கள் குழுமமே உணவும், உறையுளும் கொடுக்கின்றது. தங்கும் அறைகளும், ஆய்வகமும் வளிநிலைப் பாடு Air Condition) செய்யப்பட்டுள்ளன. புற வேலைகளில் ஈடுபட்டு உள்ளவர்கள் மிகவும் தொல்லைபடுகின்றனர். நாங்களும் புற ஆய்வுக் குச் செல்லும்போது தொல்லைப்படுகின்றோம். எங்கள் குழுமம் சவுதி அரேபியா முழுவதும் பல விடங்களில் சாலைகள், பாலங்கள் அமைக் கும் வேலையில் பணியாற்றுகின்றது. சாலை அமைக்கும் பணி முழு வதும் எந்திரங்களினாலேயே செய்யப்படுகின்றது. தரையைச் சமப் படுத்துவது, மண்வாருவது, குழி பறிப்பது, மண் பரப்புவது தண்ணீர் தெளிப்பது, மிதிப்பது அனைத்தும் எந்திரங்களே செய்கின்றன. இதனால் வேலை விரைவாகவும் செப்பமாகவும் நடைபெறுகின்றது. எங்கள் குழுமத்தில் உள்ள எந்திரங்களின் எண்ணிக்கை, இந்திய அரசு நிறுவனத்திடம் உள்ள சாலை அமைக்கும் எந்திரங்களை விட அதிகமாக இருக்கும். எங்கள் குழுமத்தைப் போலப் பல நிறுவனங் கள் சாலைகள் அமைக்கும் பணியினை இங்கு செய்து கொண்டுள்ளன.

அல்கோபார் நகரக் கடைகளில் பெரும் பகுதியான தமிழ்த் தாளிகைகள் கிடைக்கின்றன. எந்த தாளிகையானாலும் விலை இரண்டு ரியால் (5 உருபா). **தென்மொழி, தமிழ்ச்சிட்டு கிடைக்க வில்லை.** இங்கு உலகத்தின் அனைத்து நாட்டவரும் பல்வேறு நிலை களில் பணியாற்றுகின்றனர். அந்தந்த நாட்டவர் தனித்தனியாகப் பிரிந்து வாழுகின்றனர். ஆங்கிலத்தில் மற்ற மொழிக்காரரோடு பேசுகின்றனர்.

சவுதி மக்களுக்கு ஆங்கிலம் அறவே தெரியவில்லை. தெரிந்து கொள்ளவும் ஆர்வம் இல்லை. ஓரளவு மந்தமாகக் காணப்படுகின்றனர். நான் இங்குச் சென்னை நண்பர்கள் மூவருடன் தங்கியுள்ளேன். அவர் களும் என்னுடன் சென்னையில் பணியாற்றியவர்கள் தாம். எனக்கு 3 மாதங்களுக்கு முன்பாக இங்கு வந்தவர்கள். அவர்களின் வழி இவ்விடத்தின் நெளிவு சுளிவுகளை அறிந்து செயலாற்றி வருகின் றேன். அன்பு,

— **செ. சித்தார்த்தன்,** பொறியாளர், அல்-கோபார், சவுதி அரேபியா.

www.thamizham.net - Free E book No 7515

## உ. த. மு. க. வெளிநாட்டுக் கொள்கை

அ. தாங்கள் வெளியிட்ட அறிக்கையின் ஏழுவகைக் கொள்கையில், "உலக ஒற்றுமை வளர்க்கவும் உதவுகின்ற நயத்தக்க நாகரிகப் பண்புணர்வைப் பேணிப் புரக்கவும்' என்ற தெளிவான கொள்கை உள்ளது. ஆனால் 4-ஆம் பத்தியில் "உலகத் தமிழர்களுக்கு .... அரசியல் உரிமைகளுக்கும் குரல் கொடுத்துக் துணை நிற்கவும்' என்ற கொள்கை பிற உள்நாட்டு அரசியலில் தலையீடாக ஊடுருவக் கூடும் என்பதால் இதில் தெளிவுடன் அமைப்பது நலம். சொற்பொருள் தெளிவு தேவை.

ஆ. பொருளியலில் தமிழகத் தமிழினம் ஊறுபட்டுக் கிடக்கிறது. இதனை உலகத் தமிழினத்துடன் ஒப்பிட்டு வரையக் கூடிய சிக்கலற்ற சீர்மைத் திட்டம் வகுக்கப் படுதல் வேண்டும்.

இ. தமிழகமும், வெளிநாட்டுத் தமிழர்களும் இயங்கக் கூடிய துறைமுறைகளைச் சீர்பிரித்துக் காட்டப் பெறுதல் நலம். இஃது அரசியல், பொருளியல், குமுகாயவியல், காலம், இடம், சூழல் கருதித் தமிழினத்தின் அகக் கூறுகளையும் புறக் கூறுகளையும் முரண்படுத்தியுள்ள கொடுஞ்சிக்கல்களைப் போக்கத் தக்கத் திட்டம் ஆராயப்படுதல் வேண்டும்.

ஈ. வெளியுலகத் தமிழர்களின் பல இனங்களிடையே அமைந்து உள்ள ஷெ பொதுவுறவுகள் எப்படி, ஏன் அவ்வாறு அமைந்துள்ளன என்பதைத் தமிழகச் சூழலில் தமிழரல்லாதாருடன் வேறுபாடு-மாறுபாடுற்ற நிலைக்கலன்களுடன் ஒப்பிட்டு ஆராயவேண்டும். எடுத்துக் காட்டாகத் 'தென்மொழி' தன் பொருளியலில் உறுதியுடன் நின்று

---

### தென்மொழி – உ. த. மு. க. மாநாட்டு மலர்.

அடுத்த இதழ் **தென்மொழி**, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டு மலராக வெளிவர விருப்பதால், சில நாட்கள் பின் தள்ளி வரும். உடனே உறுப்பினராகும் அன்பர்கள் மலர்க்கென்று தனிக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. மற்றவர்கள் மலரைக் கூடுதல் விலை கொடுத்துப் பெற வேண்டியிருக்கும். நிலுவையுள்ள முகவர்களுக்கும் கண்டிப்பாக மலர் அனுப்பப் பெறமாட்டாது. எனவே, அத்தகைய முகவர்கள் முன் கூட்டியே முழு நிலுவையினையும் செலுத்தி விட வேண்டுகின்றோம்.

### கழக மார்பு வில்லைகள்.

மூவண்ணத்தில் உ.த.மு.க. இலச்சினை பொறித்த மாழை (Metal) மார்பு வில்லைகள் மாநாட்டில் விற்பனைக்குக் கிடைக்கும். விலை 1-50 உருபா. கூடுதலாக வில்லைகள் தேவைப்படுவோர் முன் கூட்டியே தெரிவிப்பின், அவர்களுக்கென வில்லைகள் எடுத்து வைக்கப்பெறும்.

www.thamizham.net - Free E book No 7515

வளர மலேசியாவையும், சிங்கப்பூரையும் எதிர்பார்த்து விழைவதற்கும், உ. த. மு. க. விழைவதற்கும் வேறுபாடுண்டு. வேறுபாடு இருக்கத்தான் வேண்டும். உ த.மு.க-வின் மாநாடு கூட வெளிநாட்டாரின் துணைகொண்டு செயல் படவும் கூடாது. தமிழகத்தின் பொதுப் பொருளியலில் நல்ல வளமும் நலமும் உள்ளன. இதனை ஈர்க்கத் தக்க துணிவான முயற்சிகளில் ஈடுபடலாம்.

ஒருகாலத்தில் இந்திய விடுதலைக்கும், இந்தி எதிர்ப்புப் போருக்கும் இங்கிருந்து பலர் அங்கு வந்து போராடினர்; பெருமளவுக்குப் பொருள் தண்டி அனுப்பினர். இதனால் வரலாற்று வகையிலும் பயனற்றுப் போய் விட்டது, ஈண்டும் குறிக்கத்தக்கது. பணமும் மாந்தவியலாற்றலும் விரையமானதுதான் மிச்சம். எண்ணித் துணிவது நலம்.

2. இந்திய நடுவணரசின் வெளியுறவுக் கொள்கையும், அதிலும் வெளிநாட்டில் குடியேறி அந்நாட்டுரிமை மக்களாக மாறிவிட்ட 'இந்தியர்'களைப் பற்றிய அவ்வரசின் கொள்கையும் என்ன, ஏன் என்பதையும் ஆராய வேண்டும். ஆங்கிலக் கயானா, மொரிசியசு, பிசித்தீவு ஆகிய நாடுகளில் வடவர்கள் மிகுதி வாழ்வதால் இந்திக்கும், உருதுக்கும், இந்து சமயத்திற்கும் இந்திய அரசு கோடிக் கணக்கில் அள்ளிக் கொடுக்கிறது. இந்தி பரப்பும் பேரவை அமைத்து, வடவரின வல்லாண்மையைப் பரப்பும் அதன் கொள்கையில் தந்தையை விட மகள் முகாமையாக இருக்கிறார். இதனையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சிறப்பு. 30 ஆண்டு வரலாற்றைக் காண்போம்.

3. ஆங்கிலரும், பிரஞ்சுக்காரரும், உலகத் தமிழர்களை அந் நாடுகள் விடுதலை பெற்ற பின் 'கைவிட்டு விட்டனர்'. அதேவேளை இந்திய அரசும் அவர்களைக் கைகழுவி விட்டது. அதன் தூதுவர்கள் அமைப்பும், அமர்த்தமும் முறைகேடும், இனமொழிச் சார்பு அற்றது போன்றவற்றை மிகைப் படுத்தி விட்டன. தமிழர் மிகுந்துள்ள மலேசியா, சிங்கப்பூர் போன்ற 36 நாடுகளில் தமிழர்களின் சிக்கல்களையோ, விழைவுகளையோ இந்திய நடுவணரசு பொருட்படுத்துவதில்லை. தமிழக அரசு செய்வதையும் மறுத்துத் தடுக்கிறது. இதுவும் கலைஞர் காலத்துக்கு முன்னும் பின்னும் உள்ளநிலை. ஏமாளித்தனமான **நாடு கடத்தும் திட்டமே 'பண்டார—சாத்திரி' உடன்பாட்டுக் கொடுமை..** இதனை உலகஞ் சுற்றும் தமிழரசியல்காரர்களும சிந்திப்பதில்லை. தமிழக அரசியலாளர்களில் பலர் கொடுந் தந்நலப் புலிகள்.

4. தமிழர்கள் எந்தெந்த நாடுகளில் எவ்வளவு பேர் என்றும் அவர்களின் அரசியல் — பொருளியல் — குமுகவியல் துறைகளில் மிகுந்து வரும் கோளாறுகளையும் கணக்கெடுத்து முறைப் படுத்த வேண்டும். சிக்கலான எளிதில் பெற முடியாத தடங்கலும் இதில் உண்டு. மாபெரும் ஆய்வுத் திட்டம் இதற்கு வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7515

5. உ.த.மு.க.—அமைப்புத் துறை மூலம் இப்போது அதனை உல கெங்கும் திரட்டித் தொகுத்து விட முடியாது. தமிழக ஈகைப் பண் பும், வெளியுலகத் தமிழரின் ஈகைப் பண்பும் ஒன்றுபட்டு இல்லை என்பது மெய். ஈகை என்பது பொருளியலில் மட்டுமன்று, பண்புடை மையிலும் மலையளவு வேறுபாடும் முரணும் உள்ளன.

6. உ.த.மு.க. — சமயச் சீர்மையை முதன்மையாகக் கொள் வதும் இப்போது கூடாது. இது போல் தமிழரசியல் ஈப்பும தமிழகத்துடன் கொள்வதும் தவறு. தமிழகம் பொருளீட்ட வெளி நாடுகளிடம் கெஞ்சுகிறது. இது தவறு. இதனை அங்கேயே திரட்டிக் கொள்ள முடியும் ஆனால் வெளியே 'தமிழில்லாத' வறுமை தாண்டவ மாடுகிறது. தமிழும், பண்பாடு, மற்றும் கலையுறவுக் கருவிகளும் ஏந்துகளும் வாய்ப்புகளும் வேண்டி எதிர்பார்க்கின்றன. இதனைத் 'திரைப் படம்' மட்டுமே உருவாக்கி விட முடியாது. தமிழும் கலை யும் வெளியே வர வேண்டும். நாம் இதற்கும் கி. பி. 2000 வரை போராட அணியமாக இருக்க வேண்டும். இருக்க, வருவோர் எத்தனை பேர் உள்ளனர்? ஈகையும் வாகையும் சூடுவோர் எவர்? 'தாயகத்தை மீட்பது — தனிநாடு கோருவது' என உலகப் பஞ்சா பியர் துணிந்து விட்டனர். அவர்களுக்குப் பணத்திற்குப் பஞ்ச மில்லை. கனடாவில் பெரும் பண்ணைகளும் ஆயிரக்கணக்கில் நில புலன்களும் உள்ளன. கொடி கட்டி வாழ்கின்றனர்.

7. எனவே தமிழகமும், தென்மொழியும், உ.த.மு கவும், ஈகையுடன் கைமாறு கருதாமல் வெளிநாடுகளுக்குத் தூது — தமிழ்த் தூது செல்ல வேண்டும் தமிழியத்தைப் பரப்ப வேண்டும். தமிழரியம் கூடாது. தமிழாசிரியர்கள்—புலவர்கள் வெளிநாடு செல்லவேண்டும். பணம் தரும் மனங்கள் மலேசியம், சிங்கப்பூர் தவிர வேறு எங்கும் எவரும் தரவே மாட்டார்கள். ஏடுகளும் — நூல்களும், அறிவிப்பு களும் பறக்க வேண்டும்.

என் பட்டறிவு இது. ஐந்தாண்டாக ஆண்டுக்கு ஆயிரம் உருவா செலவழிக்கிற நான் இதனால் உள முடையவில்லை என்பதை இங்கு வலியுறுத்தி விடுகிறேன். வீட்டுக்குள் நுழைந்து விட்டால் எத்தனை நாட்களுக்கும் சோறு போட்டு அனுப்பும் பண்பாடு எங்கு முண்டு. தமிழகத்தார் 'மருந்தும் விருந்தும் மூன்று நாள்—மூன்று வேளை? இது வறுமையைக் காட்டவில்லை. 'தமிழகம்' அப்படிப் பட்டது.

8. வெளிநாட்டுத் தமிழர் துன்பங்களை — ஈழம் போல், அந்த மான் போல் இரக்கம் காட்டி, எடுத்தெழுதி பரப்புதல் செய்யும் போட்டியும் முயற்சியும். இப்போது அங்கு ஒரு சில ஏடுகளுக்கு இருப்பதை வைத்து எதனையும் முடிவாக முடித்து விடக் கூடாது. ஓர் இயக்கம் தமிழர் இலண்டனில் முரண்பட்டு ஓர்மை சிதறிக் கெட் டழியும் சூழலுடன், வட அமெரிக்க ஐயாயிரம் தமிழருடன் ஒப்பிட

www.thamizham.net - Free E book No 7515

டுப் பார்த்து, இறுதியான முடிவுக்கு வர வேண்டும். உலகில் பல நாட்டுத் தமிழர்களின் சிக்கல்களில் சில மட்டுமே ஒன்று போலிருக்கும், பல துறைகளில் கடுமையான வேறுபாடுகள் மிகுதி. பத்துக்கு மேற்பட்ட நாடுகளில் ஆங்கிலர்கள் தன்னுரிமையுடன் வாழும் சூழலில் அந்நாடுகளில் இவ்வாறான வேறுபாடுகள் மிகுந்து விடவில்லை. அதுபோல் பஞ்சாபியரும், வடவரும், மலையாளிகளும், தமிழ் முசுலீம்களும், அதிக வேறுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை என்பதும் திட்டவட்டமான வரலாறு.

9. எனவே, உ.த.மு.க.—சமயம், அரசியல், பொருளியல் என்ற மூன்று வெவ்வேறான துறைகளில் உழலும், தமிழகத்திற்கப்பாலுள்ள தமிழர்களிடம், இந்த மூன்றையும் ஒன்றுபடுத்தி விட முடியாது. மூன்றையும் குழப்பக் கூடாது. மூன்றிலும் தலையிடும் கொள்கையைச் சிறிது காலம் தள்ளி வைத்துக் கொள்வது நலம்.

## உ. த. மு க. :—கிளைகள்—அமைப்பு நெறிகள் பற்றி

1. மூன்றாண்டுக்கு அமைப்பு முறையில் வெளியே கிளைகள் அமைக்கக் கூடாது. சில நாடுகளுக்கு மட்டும் தொடர்புக் குழுவை அமர்த்தலாம். இலவய ஏடுகளை வானூர்தி வழி திங்கள் தோறும் அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும் ... அஞ்சல் வழித் தொடர்புறவை வலுவாகவும், நெருக்கமாகவும் ஈர்க்கத் தக்க செய்திகளை அனுப்பச் செய்யத் தூண்டுவதும்—வேண்டுவதுமாகக் கொள்ளலாம்.

2. இந்த மூன்றாண்டில் 'தமிழகம் தமிழர்க்கே' என்ற வேட்கை விடுதலையாக மட்டுமன்று, பொருளியல் கரணியங்களுக்காகவும், வாழ்வுறுதி என்ற கட்டொழுங்குடன் திட்டமிட்டுச் செறிவாக செயலாற்ற வேண்டும். தமிழக மாவட்டக் கிளைகளும், ஊர் ஒன்றியத் துணைக்கிளைகளும் அமைத்து அதில் இணைப்பேற்படுத்த வேண்டியதே முகாமையாக வேண்டும். சமயம், கட்சி, சாதி. குழுமுறை, அரசியல் என்ற சாக்கடைத் தனமில்லாத சீரணித் தொண்டர்கள் உருவாக வேண்டும். புகை பிடிக்காத, மது அருந்தாத, மாதுணர்வு — பாலியல் தன்மையற்ற இளையோர் உருவாக்கப்படுதல் மிகமிக

---

## 1982-க்குள் ஐந்து இலக்கம் உறுப்பினர்களைச் சேர்க்க!

உ. த. மு. க. வின் தொடக்கக் குறிக்கோளாக, நாடு முழுவதிலும், உலக நாடுகள் அனைத்திலும் இருந்து, கழகத்திற்கு, 1982-ஆம் ஆண்டு முடிவதற்குள் ஏறத்தாழ ஐந்து இலக்கம் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று அன்பர்களும் ஆர்வலர்களும் மனத்தில் உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விளத்தங்கள், வேண்டுகோள்கள், உறுப்பினர் சேர்ப்புப் படிவங்கள் அனைத்தும் திசம்பர் 81 இறுதிக்குள் கிடைக்கும். — அமைப்பாளர்

www.thamizham.net - Free E book No 7515

அகத்தியம். மண வாழ்க்கை புகும் அகவை 30 ஆக வேண்டும். எந்த வகை அரசியல் கட்சியிலும் சேர்ந்திருப்போரை உ. த. மு. க. -வில் சேர்க்கவே கூடாது. தமிழகத்திற்கப்பால் வடக்கேயும் கிளைக் கழகங்களை நிறுவ வேண்டும். நமது கழகத்தில் உள்ளவர்களும் சேருகிறவர்களும் பிற அரசியல் முதலிய கட்சிச் சேற்றில் காலூன்றக் கூடவே கூடாது.

3. உ. த. மு. க. — அரசியலில் — தேர்தலில் நிற்கவோ, நுழையவோ கூடாது. சட்ட நெறிகளை — அமைப்பு முறைகளைத் தெளிவாகவும், நுட்பமாகவும் உருவாக்குவது நலம். தமிழ் பயிலாத எவரையும் கழகத்தில் சேர்ப்பதும் தவறு. தனித்தமிழரல்லாதாரை சேர்த்தல் — ஈர்த்தல் தவறு.

4. கட்சிச் சார்பற்ற இன்றைய தமிழகச் செல்வம் — சாய்காலுடையோரிடமிருந்து பேராதரவும், பணமும் பெறத் தக்க திட்டம் செய்ய வேண்டும். நவம்பர் மாநாட்டிலும் அவர்களை அழைத்துச் சிறப்பிப்பதும், உரையாற்றச் செய்வதும் தேவையே! ஏணிப்படியாகவும், ஊறுகாயாகவும், கறிவேப்பிலையாகவும் அவர்களைப் பயன் படுத்துவதில் தவறில்லை. தாழ்வுமில்லை.

அளவுக்கு மேல் பொருள் வருவாயுள்ள நல்ல மனக் குன்றங்கள் சென்னையிலும், தமிழகத்திலும் உள்ளனர். புகழாசை மிக்க சில வள்ளல்களும் வல்லாண்மையைத் தமிழறமின்றி வளர்த்துக் கொண்டுள்ளனர். இவர்களையும் மாநாடும், கழகமும் ஈர்க்க வேண்டும். சிறப்புச் செய்வதன் வழி, தகவுரையாளர்களாக அன்று, பணத்தால் மட்டும் ஈகை புரிவோராக அவர்களைப் பண்படுத்திக் கொள்வோம்.

5. உலகத் தமிழின முன்னேற்றம் முதலில் அங்குத் தமிழகத் தமிழின முன்னேற்றமாகட்டும். நான்கு வகைத் திராவிடர் கழகங்களிலிருந்து மெய்மையான தனித்தமிழர்கள் அவற்றிலிருந்து வெளியேறி உ. த. மு. க வில் சேரட்டும். அல்லது அவர்களை அடையாளங் காட்டும் 'துணிவுப் பணியில்' உ. த.மு.க.—வின் நறுந்தொண்டர்கள் கண்டுதவட்டும். அருந் தொண்டர்கள் கழகத் தொண்டுழியங்களை எந்தப் பேரும்,புகழுமின்றி, தன்மானம்—தனித்தன்மை — தற்குறித் தனமின்றி, ஒன்றுபட்டுச் செய்யட்டும்! தந்நலப் பேராசைகள் மிகுந்துள்ள குணப்பண்பாடுகள் குறைக்கப்பட வேண்டும்! குறளியம் கூறும் அறமுறைகளில் உ.த.மு க. பொதுமையும் வளமையும் பெற வேண்டுமானால், நச்சிலக்கியம் உட்பட 'பாலியல் கதையுலகம்' ஒழிக்கப் பட வேண்டும்! சீர்மை பெறவே முயலாத குப்பைக் கூலமான இன்றைய சென்னையின் கூறுகேட்ட நாளேடுகள் — கிழமை ஏடுகள் — திங்களேடுகள் அனைத்தும் அழியட்டும் — ஒழியட்டும். உ. த. மு. க.வின் பணிகள் வெற்றி பெறும்! நன்றி! இங்ஙனம்,'

— இர. ந. வீரப்பன், தலைவர், உ. த. ப. இ. கிள்ளான், மலேசியா.

www.thamizham.net - Free E.book No 7515

# தமிழீழத் தலைவர்களின் வாழ்த்தும் வரவேற்பும்.

(உ. த. மு. க. தொடக்க மாநாட்டில், பங்கு கொள்ளுமாறும் தலைமை தாங்குமாறும், மாநாட்டுச் செயற்குழு விடுத்த வேண்டு கோள் மடலுக்கு, இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழீழ விடுதலைக் கூட்டணிப் பொதுச் செயலாளரும் ஆகிய, நாவலர் திரு. அ. **அமிர்தலிங்கம்** அவர்கள் விடுத்த மடல்களும், உ. த. மு. க. தொடக்கத்தை வரவேற்று, இலங்கைப் பாராளு மன்ற எதிர்க்கட்சி உறுப்பினரும், தமிழ்ப் பேரறிஞரும், உலகெலாம் திருக் குறள் ஆண்டு பரவுவதற்குக் காரணியமாயிருந்தவருமாகிய பண்டிதர் **கா. பொ. இரத்தினம்** அவர்கள் விடுத்த மடலும், அன்பர்களின் பார்வைக்குக் கீழே வெளியிடப் பெறுகின்றன.)

## மடல் — 1

அன்புசால் ஐயா,

வணக்கம். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டின் இரண்டாம் நாள் முற்பகல் நிகழ்ச்சியில் கலந்து சிறப் புரையாற்றுமாறு தாங்கள் விடுத்த மடல் கிடைக்கப் பெற்றேன். தங்கள் அழைப்பை ஏற்று உரையாற்றுவதற்கு மகிழ்வுடன் ஒப்புக் கொள்கிறேன். பெரும்பாலும் என் மனைவியும் என்னுடன் மாநாட் டிற்கு வருகை தருவார்.

**உலகெலாம் பரந்து வாழ்ந்தும், எங்கும் துன்பத்தில் உழலும் தமிழ் இனத்துக்கு இத்தகைய ஓர் அமைப்பு மிக மிக வேண்டற் பாலது** தமிழினக் காவலர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர் கட்கு என் அன்பையும் வணக்கத்தையும் தெரிவிக்குக. பல நெருக் கடிகளுக்கு இடையில் அன்னாருக்கு மடல் வரையத் தவறியமையை மன்னிக்கக் கோருகிறேன். வணக்கம். தங்கள் அன்புள்ள

பாராளுமன்றம்
கொழும்பு
1-9-1981.

**அ. அமிர்தலிங்கம்**
பா. உ. காங்கேசன்துறை
எதிர்க்கட்சி முதல்வர்.

## மடல் — 2

அன்புடையீர்,

வணக்கம். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டில் எனது மனைவியும் நானும் கலந்து கொள்வது பற்றித் தாங்கள் எழுதிய மடல் கிடைக்கப் பெற்றேன். தங்கள் விருப்பப் படி நவம்பர் 6, 7, 8, 9 ஆகிய நாட்களில் தமிழ் நாட்டில் தங்கு வதற்கு நாம் இசைகிறோம். 'மகளிர் அரங்கிற்கு'த் தலைமை தாங்கு வது தொடர்பில், எனது மனைவி, தாம் பேச்சாளராகக் கலந்து கொள் வதற்கே விருப்பம் தெரிவித்தார். தலைமை யேற்பதை அவர் விரும்ப வில்லை. எனினும், பாவலரேறு அவர்களின் விருப்பத்தை நிறை வேற்ற நாம் எதையும் செய்வோம்.

www.thamizham.net - Free E book No 7515

'தமிழினக் காப்பு மாநாட்டில்' கலைஞர் அவர்கள் தலைமை ஏற்பதே சிறப்பு. அதற்கு ஏதாவது தடை ஏற்படுமாயின், ஐயா அவர்களின் விருப்பப்படி அப்பொறுப்பை நான் ஏற்பதற்குத் தடையில்லை. பெரும்பாலும் 6-ஆம் திகதிக்கு முன்பே தமிழ்நாடு வந்து சேரும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். வந்ததும் ஐயா அவர்களுடன் தொடர்பு கொள்வோம்.

பாராளுமன்றம்
கொழும்பு-1.
23-9-81

தங்கள் அன்புள்ள
அ. அமிர்தலிங்கம்
எதிர்க்கட்சி முதல்வர்.

## பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் மடல்.

அன்புடையீர்,

நலம். விழைவதும் அஃதே! உங்கள் மடங்கலும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க அழைப்பிதழும் கிடைத்தன. நன்றி.

உலகமெங்குமுள்ள தமிழ் மக்களை ஒன்று படுத்தி ஓர் இயக்கத்தில் இணைக்க வேண்டுமென்ற நோக்கத்தினால், 'உலகத் தமிழ் மன்றம்' ஒன்றினை நிறுவினேன். தமிழர்களிடையே முதலாவதாக நிறுவப்பட்ட உலகளாவிய நிறுவனம் இந்த உலகத் தமிழ் மன்றமே யாகும். இதன்பின் உலகளாவிய மன்றங்கள் சில தோன்றின. எனினும் இவை நிலைத்த பயனை நல்கவில்லை.

எனவே, இச் சூழ்நிலையில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' மலர்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

தமிழினம் இன்றும் தனது பண்டைய நனி நாகரிகத்திற்கிசைய வாழ்வைச் சீர்ப்படுத்திக் கொள்ளவில்லை. சமய நெறிகளிலும் வாழ்வியலிலும் தமிழ் மொழி வழக்கிலும், பிறர் புகுத்திய காட்டு விலங்காண்டிக் கொள்கைகளும் கண்மூடிப் பழக்க வழக்கங்களும் பிற மொழிகளின் வல்லாண்மையும் இன்றும் ஆட்சி செய்கின்றன. இவற்றையெல்லாம் களைந்தெறிந்து தமிழன் தமிழனாக — இனியவனாக— நல்லவனாக— வல்லவனாக வாழுதற்கு உங்கள் முன்னேற்றக் கழகம் துணிவுடனும், உறுதியுடனும் வழிவகுக்குமென நம்புகிறேன்.

உங்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு விடுத்த உங்கள் அழைப்புக்கு இசைய முடியாமை குறித்துக் கவல்கிறேன். உயர்திரு. அமிர்தலிங்கம் அவர்களும், அவருடைய வாழ்க்கைத் துணைவியாரும் கலந்து கொள்வார்கள். அவர்களிடம் எனது அன்பளிப்பை அனுப்பி வைக்கிறேன்.

வாழ்க உங்கள் கழகம்! வெல்க உங்கள் முயற்சி!

வேலணை
10-10-1981

அன்பன்
கா. பொ. இரத்தினம்.

www.thamizham.net - Free E book No 7515

எவ்வகை உரிமமும் பெருமல், எவ்வகை நெறிமுறைக்கும் கட்டுப்படாமல் வளரும் இந்த மழலையர் பள்ளிகளைத் தட்டிக் கேட்கத் தமிழக அரசு முன்வர வேண்டும். அரசாணை ஒன்றை இட வேண்டும். தமிழை முதன்மொழியாகக் கொள்ள வேண்டும். ஆங்கிலம் துணை மொழியாகப் பயிற்றுவிக்கப் படலாம். மற்ற பாடங்களைத் தமிழிலேயே கற்பிக்க வேண்டும். இந்த நெறிமுறைகளுக்கு உட்பட்ட பள்ளிகளுக்கே உரிமம் தரப்பட வேண்டும். இந்த முறைக்கு வராத பள்ளிகளைத் தடை செய்ய வேண்டும். தமிழன்பர்கள், தமிழறிஞர்கள், அனைவரும் இந்த முறையீட்டைத் தமிழக அரசுக்கு அனுப்பி வலியுறுத்தும்படி கனிவுடன் வேண்டுகிறேன். தமிழ் வாழ்ந்தால்தான் தமிழும் வாழும்; தமிழகம் வாழும்; தமிழன் வாழ முடியும். தமிழ் தாழ்ந்தால் — தமிழனுக்கு விடிவே இல்லை. இதை அனைவரும் உணர வேண்டுகிறேன். — **மணிமுத்து, 'தமிழ்ச்சுடர்', பழனி.**

*0 : 879 :* பாவலரேறு ஐயா, வணக்கம். கடந்த **31-7-81**-ல் மூன்னாள் இந்தியத் தலைமையமைச்சர் வடநாட்டு மொரார்சி தேசாய், செய்தியாளர்களிடையில் பேசுகையில், "இலங்கையில் தனிநாடு கேட்கும் உரிமை தமிழர்களுக்குக் கிடையாது. அதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். ... இந்த நாட்டில் (இந்தியாவில்) யாரும் ஒரு தனிநாடு கேட்கவோ அடையவோ முடியாது. இதனால் வன்முறை ஏற்பட்டால் — படையமைப்பின் மூலம் உடனே ஒழித்துக் கட்ட வேண்டும்', என்று வெறுப்பையும், வெகுளியையும் உமிழ்ந்திருக்கின்றார். இச் செய்தியை 'இந்து' நாளிதழ் பெரிய அளவில் வெளியிட்டிருக்கிறது. (இந்து 1-8-81), இலங்கை தமிழீழ விடுதலை முயற்சிகளை 'இந்து' ஆரம்பத்திலிருந்து தாக்கியே வந்திருக்கிறது. செயவர்த்தனே தமிழீழ 'வரம்' கொடுத்தாலும் இந்திய வடநாட்டு 'முதலாளி'களும், பார்ப்பனப் 'பூசாரி'களும் 'வரம்' கொடுக்க மாட்டார்கள் போலிருக்கிறது. இஃது இப்படியிருக்க, நம்மின குமுதம் இதழ், இலங்கைப் படுகொலையைக் கண்டித்து நாலு வரிகள் எழுதியது கிடையாது. ஆனால், சிவசங்கரி நாய்ச் சாவுக்கு நாலு பக்க ஒப்பாரி! நம்மவர்களுக்கு 'சுரணை' வரவே வராதா?

— **கோ. மணிவேலன், குறிஞ்சிப்பாடி.**

*0 : 880 :* மாண்புமிகு பெருந்தகைக்கு வணக்கம். பாவாணரின் மலர் - தங்களின் வெளியீடு-படிக்கப் பெற்று மிகவும் துன்புற்றேன். பாவாணர் பற்றித் தங்களின் இதழ் கிடைக்கப் பெற்ற பின்புதான் அறிந்து கொள்ள முடிந்தது. தமிழகத்தில் புகுமுக வகுப்பு வரை படித்த நான் இத்துணைச் சிறப்புப் பெற்ற தமிழறிஞரை அறியாமல் இருந்தமை கண்டு வெட்கினேன். ஒவ்வொருவருடைய இரங்கற் பாவையும் காணும் பொழுது என் கண்ணீரை என்னால் கட்டுப் படுத்த முடியவில்லை. உலகத் தமிழ் மாநாட்டிற்கு நான் வந்திருந்தேன். தங்களைக் காணவும், மற்றும் அறிஞர்கள் உரையைக் கேட்கவும் பெரும் வாய்ப்பு கிட்டிய தென்று எண்ணி மகிழ்ந்து வந்த எனக்கு, தங்களுக்கு அழைப்பு அனுப்பிப் பின் மறுக்கப் பட்டமை கண்டு மனம் வருந்தினேன். தங்களின் அழைப்பு மறுக்கப் பட்டமையின் காரணியம், தென்மொழிப் பறிமுதல் - ஆகியவை படிக்க நேர்ந்த பொழுது ....! தமிழகத்தில் தமிழுக்காக வாழும் ஒருவரை புறக் கணித்தது மல்லாது, இல்லத்திலே புகுந்து முறைகேடாகப் பறிமுதல் செய்தமை என்ன மடமை! இவை எல்லாம் என்னும் பொழுது நடந்தது தமிழ் மாநாடா? என்ற கேள்விக் குறி என்னுள் எழுகிறது. — **கரு. நக்கீரன், போர்ட் பிளேயர், அந்தமான்.**

www.thamizham.net - Free E book No 7515

0 : 881 : 'கார்கோண் முகந்த கமஞ்சூல் மாமழை வாள்போல் விசும்பில் வள்ளுறை சிதறி' உலகில் வாழும் உயிர்கள் அனைத்தையும் மகிழ்விக்கின்றது போல், 'தண்'ணிய தமிழை உலகின் கண் வாழும் தமிழரும் ஏனையோரும் அறிந்து மகிழும் வண்ணம் 'தென்மொழி' ஆக்கிய மதிப்பிற்குரிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களே!

பொருளுக்காக 'வேண்டுவன விட்டு வேண்டாவன பரப்பும்' பண்பாடற்ற தாளிகையுலகிலே, தமிழ்ப் பண்பாடே பெரிதென்று, 'சேற்றில் முளைத்த செந்தாமரை போல்' முரசு கொட்ட வந்த இத் 'தென்மொழி'யின்கண் யான் அறிவிப்பது : உலகினுக்கே ஓர் உயர்ந்த பண்பாட்டைக் கட்டிக் காத்துப் புகழ் பரப்பியது நமது தமிழர் நாகரிகம். அஃது இன்று நேற்றுத் தோன்றியதன்று! வரலாற்றுக்கும் முற்பட்டது. தமிழரால் வளர்க்கப்பட்ட இப் பண்பாடு, இடையில் வேண்டுமானால் சிறிது காலம் ஒளி குன்றிக் காணலாம். ஆனால் அது 'குன்றின் மேலிட்ட விளக்காக' முன்னொரு காலத்தில் ஒளி வீசியது போல் மீண்டும் திகழும் நாள் என் கண்ணில் உறுதியாகத் தெரிகின்றது.

எத்துணைத் துன்பங்கள் வந்த போதும் இம் மண்ணில் 'தமிழே என்னுயிர் ; தமிழ்ப் பண்பாடே என்யாக்கை' என்று வாழும் தங்களாலும், இன்னும் சிலராலும் இனிய தமிழ், முதிய தமிழ் வாழ்ந்து வருகின்றது. அது தொடர்ந்து வாழ, உயர அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தாங்கள் தங்கள் சுற்றத்தாருடன் கூடி எடுக்கும் முடிவை, நான் என் தலையாய கடமையாகக் கருதுவேன், அதன் பொருட்டு என்னுயிரையும் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை; என்று உறுதி பூண்டு விட்டேன். — **மெ.சுப்பிரமணியன்**, திருச்சி-20.

0 : 882 : பேரன்புடைய எனதருமை ஐயாவிற்கு, தங்களுக்கு எல்லா நலன்களையும் குறைவற அருள, பொன்னியம்மனை வேண்டிக் கொள்கிறேன். முதற்கண் நான் தமிழனாகப் பிறந்து, 25 அகவையைப் பயனின்றிக் கடந்து விட்ட பிறகு, இன்றுதான் தங்களுடைய விலைமதிப்பற்ற **தென்மொழி** இதழைப் படிக்க நேரிட்டது என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். சுருக்கமாகச் சொல்லப்புகின், இதழில் உள்ள ஒவ்வொரு சொல்லும் தலைசிறந்த எண்ணக் குமுறல்கள் ; உணர்ச்சிப் பிழம்புகள் ; மானமுள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் சாட்டைகள். தமிழ் என்று வெளியே கதறிக் கொண்டு, தமிழனுக்கே வேட்டு வைக்கும் நாய்மைத் தன்மையை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறீர்கள் ... சில வரிகள் சாட்டையாய் என் நெஞ்சைப் பிளந்து அரத்தம் கசியச் செய்து விட்டன ... தங்கள் திருத்தொண்டில் தோளோடு தோள் சேர்த்து உழைக்க என்றும் ஆயத்தமாக இருக்கிறேன் என்பதை உறுதியாகச் சொல்லிக் கொள்ளப் பெரிதும் ஆசைப் படுகிறேன். இதுவரை அது போன்ற தலைவனைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். நீங்கள் கிடைத்து விட்டீர்கள். தங்களின் ஒப்பற்ற தலைமையின் கீழ், தாழ்ந்து கிடக்கும் என் தமிழகம் இத் தரையில் தலைசிறந்தோங்கிட, என் உடல், பொருள், ஆவி அனைத்தையும் உரித்தாக்குவேன் என்று என் போன்ற நண்பர்களின் சார்பாகவும் சூளுரைக்கிறேன். — **நா. மதியழகன்**, புதுவை-1.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

www.thamizham.net - Free E book No 7515